
# கவிதை சிந்தும் கண்ணீர்




ஆசிரியர்

வி.பாஸ்கரன்

# கவிதை சிந்தும் கண்ணீர்

ஆசிரியர் வீ. பாஸ்கரன்



என் கவிதை சிந்தும் கண்ணீர்
எமது விடுதலைப் போராட்டத்தில்
உயிர்களை ஈகம் செய்த
மாவீரர்களிற்கும், பொதுமக்களிற்கும்.

## கவிதை சிந்தும் கண்ணீர்

ஆசிரியர் : வி.பாஸ்கரன்

பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு ஆவணி 2037

20-09-2006

மின்னஞ்சல் : kavithaisinthumkaneer@yahoo.fr

வடிவமைப்பு : து.பிரபாகரன்

அச்சுப்பதிப்பு : வாசன் அச்சகம்

## ஆசிரியரின் ஆசிச் செய்தி

கவிதை காலத்தின் கண்ணாடி என்பார்கள். கவிஞன் தனது எண்ணக்கருவை, தான் காணும் காட்சியை எழுத்துருவில் வடித்து வாசகனையும் தன் உலகிற்கு எடுத்துச் செல்லக் கூடியவன். இதை உமது கவிதையில் மிகவும் துலாம்பரமாக புதுக்கவிதை வடிவில் பார்க்க முடிகின்றது. சாதாரண பாவனையில் உள்ள சொற்களைக் கொண்டே உமது கருத்தையும், எண்ணத்தையும் சொல்லும் விதம் பாராட்டிற்குரியது.

நிற்க எமது மொழி, எமது பண்பு, எமது கலாச்சாரம் என்பனவற்றை இல்லாது ஒழிக்க பல அழுத்தங்கள் ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் உம்போன்ற இளம் இடம்பெயர்ந்த எழுத்தாளர்கள் வெளிநாடுகளில் செய்யும் இம் முயற்சி வரவேற்கப்பட வேண்டியதும் உற்சாகப்படுத்தப்பட வேண்டியதுமாகும். அத்துடன் உமது தமிழ் இலக்கிய தொண்டு தொடரவும் கவிதைகள் பல படைத்து மொழியையும் எமது பாரம்பரியத்தையும் பாரெல்லாம் பரவச் செய்ய வேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

நன்றி

இப்படிக்கு

தி.தர்மலிங்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

## வாழ்த்துச்செய்தி

இலக்கியர் பாஸ்கரனின் "கவிதை சிந்தும் கண்ணீர்" ஓர் இலட்சியப் படைப்பு. தாய்மொழி உணர்வு, அன்னை மண் பற்று, விடுதலை வேட்கை, உயிர் நேயம் என உயர்ந்த இலட்சியங்களைத் தாங்கி இவர் தமிழ் சிலிர்க்கிறது.

"தமிழ் மொழி என்பது
உயிரின் இருப்பு!
தாயகம் என்பது
எங்களின் உரிமை!"

என்கிறார் பாஸ்கரன்.

இலக்கியன் எவனாக இருந்தாலும், தமிழ்மொழியும் தாயகமும் அவன் உயிரின் இரு கூறுகளாய் நிற்றல் இயல்பே.

"தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்றும்,

"எனை ஈன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினை அளவு நலமேனும் கிடைக்குமானால்
செத்தொழியும் நாள் எனக்குத் திருநாள் ஆகும்"

என்றும், பாரதிதாசன் தமிழ்மொழியையும், தமிழ்நாட்டையும் உயிருக்கு நிகராக எண்ணினார், போற்றினார். பாஸ்கரனும் அதே பாதைதான். தமிழீழ மண்ணில் ஆழமாய் வேர்கொண்டு அவர் இலக்கியம் தழைக்கிறது.

"ஜேர்மனியில் வாழ்ந்தாலும் - எங்கள்
ஜென்ம பூமியை மறப்போமா?
பாரீசில் வாழ்ந்தாலும் - தமிழ்ப்
பண்பாட்டை மறப்போமா?

என்கிறார் பாஸ்கரன்.

அழகாகத்தான் தமிழீழம் இருந்தது. எப்படி எங்கள் மண் நெருப்பானது?

"நீலவானம் அழகுதான்
வானமதில் பறக்கும்
வெள்ளைப் பறவையும்
கொள்ளை அழகுதான்...
ஆனால்
கோரமான எறிகணை ஒன்று
பறந்து வருகிறதே..."

எதிரியே போரைக் கொண்டு வந்தான் என்கிறார் பாஸ்கரன்.

"களத்தில் எதிரி வந்தபோது
கரும்புலியானோம்!
கடலில் எதிரி வந்தபோது
கடல் புலியானோம்!
வானில் எதிரி வந்தபோது
வான் புலியானோம்!"

என்கிறார் அவர்.

மாந்தநேயத்தை மட்டும் அல்ல, உயிர்கள் அனைத்தையும் நேசிக்கும் மாபெரும் அன்புப் பெருக்கினை பாஸ்கரன் இலக்கியத்தில் காண்கிறேன்.

"மனிதன் போடும் குண்டுகளால்
மரங்களும் பூக்களை உதிர்க்கிறதே"

வாழ்த்துகிறேன் பாஸ்கரனை - வாடிய
பயிரை கண்ட போதெல்லாம்
வாடிய வள்ளலார் உங்கள்
இலக்கியத்தில் வாழ்கிறார்.

- காசியானந்தன் -

## அணிந்துரை

கலை இலக்கியங்களின் பிறப்பகம் காப்பகம் என்றெல்லாம் புகழப்படும் பாரீஸ் மாநகரில் "கவிதை சிந்தும் கண்ணீர்" தந்திருக்கும் பாஸ்கரனை முதன் முதலாக சந்தித்தது என்றும் எனது மனதில் மறக்க முடியாத நிகழ்வாகவே பதியம்பெற்றுள்ளது.

புலம்பெயர்ந்தோர் இலக்கிய வெளியீடாக 1986 ல் "மண்ணைத் தேடும் மனங்கள்" என்னும் சிறுகதைத் தொகுப்பினை வெளியீடு செய்து வைத்த ஐரோப்பியத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், தனது இரண்டாவது நூலாக 1987 ல் "தூரத்து விடிவெள்ளி" கவிதைத் தொகுப்பினை மறைந்த எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக, முறையான விமர்சன நிகழ்வோடு வெளியீடு செய்தது. அவ்வைபவத்தில் கலந்துகொண்டு,காத்திருந்து மிக இளையவராயிருந்தும் முதிர்ந்த மனதோடு எமது முயற்சிகளை வாழ்த்தியதோடு ஒரு சில வினாடிகள் என்னோடு உரையாடினார். அப்போது இளைஞனான தனக்குள் ஒளிந்திருக்கும் கவிஞனையும் அவர் வெளிப்படுத்தினார்.

மிகவும் மென்மையாகப் பேசினார். ஆயினும் மிகத் தெளிவாக இருந்தது அவர் பேச்சு. வார்த்தைகள் அளவோடு நயமாக இருந்தன. ஆயினும் அநீதத்திற்கான மனக்கொதிப்பு வெளிப்பட்டது.

தாயகத்தின் மீதும் தாய்மொழியின் மீதும் அவர் கொண்டிருந்த மிக ஆழமான பற்றை அவரிடம் உணரமுடிந்தது. மனித நேயத்திற்கும் முன்னேற்றத்திற்குமான முன்னெடுப்புக்களில் அவர் கொண்டிருந்த ஆர்வம் முகத்தில் பிரகாசித்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக தாயக விடுதலைப் பணிகளில் அன்றிலிருந்து தொடரும் செயல்பாடு, வேட்கை இவற்றினைப் பார்க்குமிடத்து, இன்று இவர் ஒரு கவிஞனாகவும் உயர்ந்து நிற்பது இயல்பானதொன்றேயன்றி வியப்புக்குரியதல்ல. எனவே "கவிதை தந்த கண்ணீர்" நினைத்து வந்த கண்ணீரல்ல மனம் கனத்து வந்த கண்ணீர்தான்.

1984 ல் பாரீஸ் மாநகரில் உருவாக்கம் பெற்ற "ஐரோப்பியத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்" மூன்று சிறுகதைத் தொகுப்புக்களையும் ஒரு கவிதைத் தொகுப்பினையும் பதிப்பித்து வெளியிட்டது. இன்று புலம்பெயர்ந்து வாழும் தமிழீழப் படைப்பாளிகளின் கலை இலக்கியப் படைப்புக்கள் "புலம்பெயர்ந்தோர் இலக்கியம்" என்ற நாமம் பெற்று கருத்தியல் நிறைந்த படைப்புக்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பது இலக்கிய மனங்களுக்கு நிறைவைத் தருகிறது. இன்னும் சொல்லப்போனால் புலம்பெயர்ந்தோர் இலக்கியப் படைப்புக்கள், இலக்கியக் களங்கள் மிக இறுக்கம் பெற்று வருகின்றன. அந்த வகையில் புலம்பெயர்ந்தோர் இலக்கிய வானில் ஒளிபரப்ப வரும் ஒரு புதிய வரவாகவே பாஸ்கரனையும் என்னால் பார்க்க முடிகிறது. நல்ல கவித்துவம், சொல்லாளுமை, பொருள் வீச்சு இவர் கவிதைகளில் காணமுடிகிறது. சமூகத்தின்பால் அக்கறை கொண்ட ஒரு படைப்பாளியின் ஏக்கத்தையும், சமகால நகர்வையும் இவர் கவிதைகளில் காணமுடிகிறது.

"தமிழீழக் கடலலைகள் கூட
ஒன்றுடன் ஒன்று மோதிப்
போராடும்படி புத்தி சொன்னது"

என்று மிக எளிமையாகப் பொருள் வீச்சோடு சொல்லும் இவர்

"எதிரிகளுக்கு நீ நெருப்பாய் இருந்தாய்
செஞ்சோலைச் சிறார்களோடு பனியாய் உருகினாய்
தோழர்களுக்கு இனிய மாங்கனியாய் இனித்தாய்

துரோகிகளிற்கு அலரி விதையாய் கசந்தாய்"

தேசியத்தலைவர் மீது தான் கொண்டிருக்கும் பாசத்தை இப்படி வெளிப்படுத்தியவர். "மானிட தினம்" என்ற மற்றொரு கவிதையில்,

"வல்லரசுகள்
சந்தையில் விலை போகாத உணவுகளை
கடலில் கொட்டி
தர்மம் பேசும்
இந்த பூமிக்கு
இன்னொரு தினம் வேண்டும்
அது மானிட தினம்"

இக்கவி வரிகள் அதிகார அரசுகளின் போலித்தனங்களை மனங்களில் அழுத்தும் வண்ணம் பதியம் வைக்கிறார்.

"ஏழைக்கடவுள்" என்ற கவிதையில் உலகின் விளிம்பு நிலை மக்களின் வறுமையின் கொடுமையை கறுத்த தடித்த மையினால் கோடிட்டுக் காட்டியுள்ளார்,

"கிழிந்த ஆடைகள்
வரண்ட வயிறுகள்
மகிழ்ச்சியை
வறுமையிடம்
அடகுவைத்து விட்ட
மானிடங்கள்
எல்லோரும்
ஆண்டவன் குழந்தைகளென்றால்
இவர்களென்ன
ஏழைக்கடவுளின்
குழந்தைகளா? "

"உனக்கு வெற்றி காத்திருக்கிறது" என்ற கவிதையில் சில வரிகள்...

"நீ எழுந்து நட
பேசிக்கொண்டே நடப்போம்
உனக்குத் தாகமாக இருக்கிறது - இந்தத்
தண்ணீரைக் குடி - இதுவும்
விலை கொடுத்து வாங்கியதுதான்
இந்த உலகில்
எது இலவசமாகக் கிடைக்கிறது?

ஒன்றுமில்லாதவன் கூட
ஒன்றுமில்லாதவனை நேசிப்பதில்லை
சமுத்திரத்தில் நீந்தும் சின்ன மீனைப் பார்
யார் நீந்தக் கற்றுக் கொடுத்தது? "

இப்படிப் பல முத்துக்கள் இக்கவிதைத் தொகுப்பில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன.

சமூகத்தின்பால் அக்கறை கொண்ட படைப்பாளிகளின் ஆக்கங்கள் நூலுருப்பெற்று ஐரோப்பிய நாடுகளில் வெளிவந்து கொண்டிருப்பது மனது நிறைவைத் தருகிறது. புலம்பெயர் இலக்கிய வெளியீடுகள் என தனித்துவமும் காத்திரமும் பெற்றுவரும் இக்காலப்பொழுதில், "தகுதியற்றவைகள் கூட புத்தக வடிவம் பெற்று புலம்பெயர் படைப்பாளிகளின் தரத்திற்கு மாசு கற்பிக்கின்றன", என்ற சர்ச்சையும் விவாதங்களும் உயர்ந்து ஒலிப்பது பற்றி கவனம் செலுத்தவேண்டிய கட்டாயம் இலக்கிய ஆர்வலர்களுக்கு ஏற்படவே செய்கிறது. இது பற்றி ஒரு ஆக்கபூர்வமான சிந்தனையும், பொறுப்பும், தெளிவான தீர்வும் அவசியம்தான்.

1965 - 70 களில் ஈழத்தில் "எழில்" என்னும் கலை இலக்கிய மாத சஞ்சிகையின் ஆசிரியராக, பதிப்பாளராக பணியாற்றியபோது, மக்களால் தெரிந்திருந்த பல மூத்த எழுத்தாளர்களையும், ஆரம்ப நிலையில் உள்ளோரையும் சந்திக்கின்ற வாய்ப்புக்கள் எனக்குக் கிடைத்தது.

அவர்கள் படிப்பகங்களில் கட்டுக்கட்டாய் கையெழுத்துப்பிரதிகள் தூசு படிந்தவைகளாக ஆங்காங்கே தரையில் போடப்பட்டுக் கிடந்தன. அவைகள் அச்சாக்கம் பெற முடியவில்லையே என்ற ஏக்கமும் வேதனையும் அந்தப் படைப்பாளிகளின் முகங்களில் படிந்திருந்ததைப் பார்த்திருக்கிறேன். சிலர் இது பற்றி மனம் நொந்து பேசியதுமுண்டு. ஆனால் இன்றைய காலப்பொழுது அப்படியல்ல. அச்சகங்கள் அவரவர் இல்லங்களுக்கே வந்துவிட்டன. அதிலும் ஐரோப்பிய நாடுகளில் வாழ்வோருக்கு எண்ணியதை எழுதுவது, எழுதுவதை நுலாக்குவது என்பது மிகச் சுலபமாகவே அமைந்து விடுகிறது. என்ன காரணத்தினாலேயோ சில தமிழக பதிப்பகங்களும் "எழுதுங்கள்" நாங்கள் பதிப்பித்துத் தருகிறோம் என முனைந்து கொண்டு நிற்கின்றன.

எனவே விதைக்க வரும்புபவர்கள் விதைக்கட்டும். யாரும் அதை முளையிலே கிள்ளி எறிய வேண்டாம். துளிர் விடட்டும். அப்போது நெல்லையும் புல்லையும் நிட்சயம் அடையாளம் காண முடியும்.

அரங்கிற்கு வந்தால்தானே நல்ல நடிகர் யார்?, நல்ல பாடகர் யார்?, நல்ல இயக்குநர் யார்? என்பதை தெரிந்து கொள்ள முடியும்.

கடலுக்குள் இருக்கும் சிப்பிகளை எடுத்துப் பிரித்துப் பார்த்தால்தானே முத்துகளையும் பெறமுடியும். இதே வேளை இன்றைய சில வெளியீடுகள்,

"பொய் சொன்னாலும் மெய் சொன்னாலும்
வாயால் சொல்லி பலனில்லே - அதை
மையில எழுதி பேப்பரில் அடித்தால்
மறுத்துப் பேச ஆளில்லே"

என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகளையும் நினைவுபடுத்தவே செய்கின்றன.

பொதுவாக எந்தவொரு படைப்பையும் பிரித்துப் பார்த்து, தெளிவுபடுத்தி படைப்பாளிகளையும் ஊக்கப்படுத்தி வளர்த்தெடுக்கவேண்டிய பொறுப்பு விமர்சகர்கள் கையிலேதான் தங்கியுள்ளது. விமர்சனம் என்பது உணர்வுபூர்வமானதல்ல, அறிவுபூர்வமானது. அந்தளவில் இன்றைய நிலையில் விமர்சகர்களின் பொறுப்பே பன்மடங்காகியுள்ளது.
கவனத்தில் கொள்வார்களா....?

"கவிதை சிந்தும் கண்ணீர்" பாஸ்கரனின் கன்னி முயற்சியாய் வெளிவரும் இக்கவிதைத் தொகுப்பில் அறுபத்தொரு கவிதைகளும் சில பாடல்களும் இடம்பெற்றுள்ளன. படித்து முடித்தபோது மனம் இறுக்கமடைந்து கனத்து நிற்கிறது. ஒரு அறிவுத்தேடலுக்கு படிப்போரை நகர்த்தத் தூண்டும் தன்மை தெரிகிறது. இவை ஒரு நல்ல கவிஞனுக்கான ஆரம்ப வெளிப்பாடு. நாளை இவர் அடையாளப்படுத்தக்கூடிய படைப்பாளியாக வலம் வருவதற்கான வாசல் கதவைத் திறந்து வைக்கிறது இக் கவிதைநூல்.

என்றும் அன்புடன்
எம். அரியநாயகம்
நாடக ஆசிரியர்
ஸ்தாபகத் தலைவர்
ஐரோப்பியத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்

## சாற்று கவி

கொடுமை புரியும் பகைவர்களைக்
கொளுத்தும்! நமக்கு உணர்வூட்டும்
நெடுமைத் துயரை, பேரிருளை
நீக்கும்! நெஞ்சுள் கனல் மூட்டும்!
மடமைச் சேற்றில் வதைவோரை
மாற்றும்! வளமார் நெறிகூட்டும்!
கடமை மறவன் பாச்கரனின்
கண்ணீர் சிந்தும் கவிதைகளே!

சூழும் புகழோன் நம்தலைவன்
சுடரும் மனத்தன் வழியினிலே
வாழும் தமிழர் இனமோங்க,
வன்மைப் புலியின் கொடியோங்க,
ஈழம் மலர்ந்து மணம் வீச,
இன்பத் தமிழின் சீர்பாட,
தாழம் பூவாய்த் தமிழ் மணக்கும்
கண்ணீர் சிந்தும் கவிதைகளே!

கவிஞர் கி. பாரதிதாசன்
தலைவர்: கம்பன் கழகம், பிரான்சு.

## தூங்கவிடாத தமிழ்

தொட்டில் மண்ணின் மீதான முடிச்சவிழ விடாத தூய விருப்பமே தூர நாடுகளில் வாழ்ந்தாலும் தன் சொந்த நாட்டின் மீதான ஈடுபாட்டில் இறுக்கமாய் இருக்க வலியுறுத்துகிறது.

உலக நாடுகளில்...எந்த இனத்திற்கும் இல்லாத அளவிற்கு ஈழத் தமிழர்களுக்கு நாட்டுப்பற்று என்பதும்..மண் மீட்சிக்கான ஒத்துழைப்பு என்பதும் உளவியல் தளகத்திலும்..உடலுழைப்பு தளத்திலும் மிகுதியாக இருப்பதைக் கண்டு பெருமைப்படுகிறேன்.

படைப்பிலக்கியத் தளத்தில்...அறிவாணவம் பிடித்த சில உளவியற்சிக்கல்கள்..இருப்பினும் அவற்றையெல்லாம் மீறிய விடுதலைக்கான வீரிய விழிப்புகள் விளைந்து செழிப்பது இங்கு இயல்பாகிவிட்டது.

பல்வேறு நாடுகளில் வாழ்கின்ற சூழலிலும், தம் மண் விடுதலைக்கான முயற்சிகளாக..தமக்குக் கைவரப் பெற்ற..இசையமைக்கும் திறனாயினும்...பாடும் திறனாயினும்... பாடலெழுதும் திறனாயினும்...எழுத்துத் திறனாயினும்..அத்திறனில்...வணிகத்தை முதன்மைப்படுத்தாமல் ஈழத்தை முதன்மைப்படுத்துகிற ஆழத்தைப் பார்க்க முடிகிறது.

அத்தகையவர்களில் ஒருவராகத்தார் உடன்பிறந்தார் பாஸ்கரன் அவர்களையும் பார்க்கிறேன்.

தன் குழந்தைக்குத்
தமிழீழ வானத்து
நிலாக் காட்டி

சோறூட்டி
தாலாட்டுவாள்

என்கிற வரிகள் அவரது விடுதலை நம்பிக்கையை நமக்கு விருப்போடு சொல்கிறது.

மூளையைக் கொண்டு நட எனும்

அவரது அறிவுப் பயணம்.

"நீ சுவாசிக்கும் காற்றைக் கூட
போராடியல்லவா சுவாசிக்க வேண்டியிருக்கிறது
போராடாமல் இங்கு ஏது கிடைக்கிறது
சகோதரா
போராடினால் எல்லாமே கிடைக்கிறது"

ஆம்...கவிஞர் பாஸ்கரனின் கவிதை முயற்சியும் போராட்ட முயற்சிகளில் ஒன்றாகப் பயன்பட்டு தமிழீழம் கிடைக்கும் நாளில்..மகிழ்ச்சியடையட்டும் என்று

அன்பில் வாழ்த்தும்
அண்ணன் அறிவுமதி

## என் கையை நீட்டுகிறேன்..........

என் இதயத்திலிருந்து இறங்கி வரும் மனிதநேய உணர்வுகளோடு எனது இனம், மொழி மீதுள்ள பாச உணர்வுகளோடு உங்களது கைகளை இறுகப் பற்றிக் கொள்கின்றேன்.

இக் கவிதை நூலை வாசிக்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் முன்கூட்டியே எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலிகளில் ஒரு குறுகிய வாசக நேயர்களிற்கு மட்டும் அறிமுகமாயிருக்கும் நான் சில அறிமுக எண்ணங்களை உங்களோடு பகிர விரும்புகிறேன். இந்தப் பகிர்தல் எனது கவிதைகளிற்கும் உங்களிற்குமிடையில் ஒரு புரிதலை கொண்டு வருமென நான் நம்புகிறேன்.

நான் பேசுவது மிகக் குறைவு. ஆனால் இந்த பேசாத பொழுதுகளிலெல்லாம் குடும்பம், சுற்றாடல், சமூகம், தாய்நாடு, உலகம் என சிந்தனைகள் விரிந்து செல்கிறது. எனது சிந்தனையை பகிர்ந்து கொள்வதற்கு இந்த இயந்திரமயமான வாழ்க்கையில் பொருத்தமான நண்பர்களை சந்திப்பது மிகவும் அரிது. எனக்கு எழுத வேண்டுமென்ற மனோநிலை தோன்றும்பொழுது எனது சிந்தனைகளை கவிதைகளாக, கட்டுரைகளாக, பாடல்களாக, சிறுகதைகளாக, சிறுவர் நாடகங்களாக எழுதி வருகிறேன். இவ்வாறாக பத்தொன்பது வயதிலிருந்து எழுதிய கவிதைகள், பாடல்களின் தொகுப்பே இந்தக் கவிதை நூலாகும்.

இக்கவிதைகளை வாசிக்கும் கணங்களில் எனது குறைகள், நிறைகள், பலங்கள், பலவீனங்கள் எல்லாவற்றையுமே புரிந்து கொள்வீர்கள். தமிழ் இலக்கிய சமுத்திரத்தின் ஆழத்தில் நீந்தி முத்துக்களை கொணர்வதற்கு இன்னும் அதிக தேடலும் உழைப்பும் தேவையென்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிகிறது. எனவே ஆக்கபூர்வமான விமர்சனங்கள் மூலம் என்னை ஒரு காட்டமான

படைப்பாளியாக உருவாக்கவேண்டியது தமிழ் வாசகர்களாகிய உங்களிடத்திலேயே உள்ளது.

இக்கவிதை நூலை வெளியில் கொண்டு வரவேண்டுமென்று எனக்கு ஊக்கமளித்த திரு பாலச்சந்திரன், திரு சுதன், திரு டக்ளஸ் நன்றியோடு நினைவு கூரத்தக்கவர்கள். எனது இத்தனை கவிதைகளையும், பாடல்களையும் கணனிப்பொறியில் உருவாக்கி இந்நூலை வடிவமைத்துத் தந்த ஆசிரியர் திரு து.பிரபாகரன் இற்கு ஆயிரம் தடவைகள் நன்றி சொன்னாலும் தகும்.

ஆசிச் செய்தி வழங்கிய எனது வகுப்பாசிரியர் திரு. தி.தர்மலிங்கம், வாழ்த்துச் செய்தி வழங்கிய தமிழ்த் தேசிய கவிஞர்கள் திரு. காசியானந்தன், திரு. அறிவுமதி ஆகியோர் எனது இதயபூர்வமான நன்றிக்குரியவர்கள். நூலுருவாக்குவதற்கு வழிகாட்டி அணிந்துரை தந்த திரு. எம். அரியநாயகம் அவர்கள் எனது மரியாதைக்கும் நன்றிக்கும் உரியவர். கம்பன் கழகத்தினூடாக சிறந்த தமிழ்த் தொண்டாற்றி வரும் திரு. கி. பாரதிதாசனின் சாற்றுகவிக்கும் என்றும் நான் நன்றியுடன் இருக்கக் கடமைப்பட்டவன்.

அழகான அட்டைப்படத்தை அமைத்து தந்த திரு சு.பிரதீப் இற்கும் , இந்நூலை அச்சேற்றித் தந்த வாசன் அச்சகத்தாருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அவ்வப்போது எனது கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள், சிறுகதைகள் என்பவற்றை வெளியிட்டு எனது வளர்ச்சிக்குதவிய நாளிதழ்கள், மாத இதழ்கள் ஒலி, ஒளி பரப்பிய வானொலிகள், தொலைக்காட்சி யாவற்றுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

ஆசிரியர் வி.பாஸ்கரன்

# உள்ளே . . .

## கவிதைகள்

1. அன்புத்தமிழா அழாதே.....23
2. கவிதை முத்தம்.....24
3. மீண்டும் ஒருநாள்.....25
4. குட்டித்தமிழா நீ தூங்கு.....26
5. தமிழ் நெப்போலியர்கள்.....27
6. தூங்காதே தமிழா.....28
7. வாழ்க்கைப் பயணம்.....29
8. தமிழ்ப் பெண்ணே.....30
9. உலகமெல்லாம் ஓடி ஓடி.....32
10. நாட்டுப் புதினம்.....33
11. குழந்தை துப்பாக்கி கேட்கிறது.....34
12. சமாதானம்.....35
13. ஒளியைத் தேடும் பயணம்.....37
14. என் பாதையில்.....39
15. நண்பன்.....40
16. நீதானின்று கதாநாயகன்.....41
17. நானும் கூடத்தான்.....42
18. வெற்றி மெதுவாகத்தான் வரும்.....43
19. ஊருக்காக அழுகிறார்கள்.....44
20. குழந்தை மனிதர்கள்.....45
21. உனக்கு வெற்றி காத்திருக்கிறது.....46
22. காதல் கொக்கு.....48
23. கடதாசி வாழ்க்கை.....49
24. தயவுசெய்து மனம் திருந்துங்கள்.....50
25. விவாகரத்து வேண்டாம்.....51
26. கடன்காரன்.....52
27. நிர்வாணக் குழந்தைகள்.....53
28. என் இனிய காதலிக்கு.....54
29. ஏழை இந்தியா.....55
30. மேகங்களே! மேகங்களே!.....56
31. வைன் கோஸ்டிகள்.....57
32. மான விற்பனை.....58
33. மானிட தினம்.....59
34. ஏழைக்கடவுள்.....60
35. அப்பா! என்னை விட்டு விடுங்கள்.....61
36. மழைக் குடைகள்.....62
37. புகை பிடித்த சுவர்கள்.....63
38. அன்பே ஆண்டவன்.....64
39. உலகம் அழுகிறது.....65
40. மக்கள் சேவையே மகேசன் சேவை.....66

41. சுதந்திரப் பூவைப் பறி.....67
42. மானிடத்தின் விலை என்ன?.....68
43. தட்டுங்கள் திறக்கப்படும்.....69
44. துயிலும் இல்லங்கள் மீண்டும் துளிர்க்கின்றன.....70
45. எப்பொழுதும் நீ மாணவன்தான்.....71
46. விடுதலைத் தலைவன்.....72
47. இரத்தத்தால் எழுதும் வரலாறு.....74
48. மரமே! மரமே!.....75
49. சிரி அம்மா சிரி.....76
50. என்ன புத்தி சொல்ல வந்தாய்.....77
51. அன்பான அம்மா.....78
52. அன்பான அப்பா.....79
53. வெள்ளை மாளிகை.....80
54. என் நினைவுக்கிணற்றின் ஆழத்தில்.....81
55. இன்று மனிதன் பேசவில்லை.....82
56. ஒன்றாக அழுவோம்.....83
57. நான் கவிஞனல்ல.....85
58. மனப்புரட்சி.....87
59. தேச விடுதலையின் பின்பு.....91
60. சமாதானக் காற்று.....92
61. கவிதை சிந்தும் கண்ணீர்.....94

## பாடல்கள்

62. மா வீரரே.....98
63. பறவைகள் பறந்து போயின.....100
64. நாங்கள் புலம்பெயர் தமிழ்.....101
65. பார் பார் அங்கே யாழ்ப்பாணம்.....102
66. வெற்றி வெற்றி என்றே பாடு.....103
67. யாரும் யாரெனக் கேட்டால்.....104
68. தனி நாடா இல்லை வெளிநாடா.....105
69. இளைய பூவே.....106
70. தமிழீழம் எங்கள் தாய்நாடு.....107
71. சமாதானம் என்ன ஆச்சு.....108
72. ஏழை மனிதா நீ.....109
73. புலிகள் புலிகள்.....110
74. தாய்நிலம் என்பது தாயின்மடி.....111
75. மானிடனே எழுக.....112

## அன்புத்தமிழா அழாதே!

என் அன்புத்தமிழா - நீ
அழாதே!

உன் இதயத்திற்குள்
இருட்டி விட்டதா?
இருட்டினாலும்
எரியும் விளக்கை
ஏற்றி வை!

உன் இதயக்கடல்
கொந்தளித்தாலும்
எரியும் விளக்கை மட்டும்
அணைய விடாதே!

உன் இதயப் பூந்தோட்டம்
கருகியிருந்தாலும்
கவலை கொள்ளாதே!
சுதந்திர மழையில் - அது
மீண்டும் துளிர்க்கும்.

இரவு இரவாக
இருந்ததில்லை
அது விடியும்
அப்பொழுது
தமிழீழ வானத்தில்
சிங்கள விமானங்கள் முழங்காது
தமிழ் ஓசை மட்டும் முழங்கும்.

அப்பொழுது
தமிழீழத் தாய்
தன் குழந்தைக்கு
தமிழீழ வானத்து
நிலா காட்டி
சோறூட்டி
தாலாட்டுவாள்.

"வான்மதி" இதழில் வெளியான கவிதை - வைகாசி1992

# கவிதை முத்தம்

என் தமிழே!
என் இதயத்தால்
உனக்கொரு கவிதை முத்தம்
உன் மடியில் தூங்க
மனமேங்குது நித்தம் - ஆனால்
வறுமைச்சாத்தான்
கைகளைப் பற்றி இழுக்கிறான்.

என் தமிழே
அந்நிய மொழிகள் - எனக்கு
நோய் மாத்திரைகளாக இருக்கின்றனவே!
நீ சிங்களத் தெருக்களில்
நிர்வாணமாக்கப்பட்ட போது - என்
கண்ணீர்ப் பூக்களை - உன்
காலடியில் தூவினேன் - ஆனால்
இதோ! வந்துவிட்டார்கள்
என் சகோதரர்கள்
உன் கண்ணீரைத் துடைக்க
ஆயுதங்களோடு.

என் தமிழே!
நாளோர் நான் நிட்சயமாகி
உன்னிடம் நெருங்கி வருவேன்
ஓர் இரத்த உறவினனாக
ஓர் கவிஞனாக - வந்து
உன்னை அலங்கரிப்பேன்.

என் தமிழே!
நான் உனக்கோர்
பிஞ்சுக்குழந்தை
நானுன் தாலாட்டிலேயே
தூங்குவேன்
என் தாயைப் போன்ற தமிழே!
உன் காலடியிலொரு
நாயாகத் தூங்குவேன்.

"தமிழ் அலை" வானொலியில் ஒலிபரப்பான கவிதை

# மீண்டும் ஓர்நாள்

ஓ! என் தமிழீழமே! - அந்த
மாமர நிழலிலே
மணல் வெளியினிலே
உன் நெஞ்சில்
என் பிஞ்சுவிரல்களால்
மிதித்து.............

தேங்காய் சிரட்டைகளில்
மணல் பொங்கலாக்கும் போதே
மாங்கனிகளை கோத
கீ... கீ... என என்னோடு
யுத்த பிரகடனம் செய்து கொண்டு
பறந்து வரும் பச்சிளங்கிளிகளை
நான் விரட்டி கலைக்க - என்னோடு
சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டு
பட... பட... வென இறக்கைகளையடித்து
பறந்து செல்லும்
காட்சியை ரசித்து
ஓ! எத்தனை நாள் எத்தனை நாள்.

சத்தம் போடாமலே நித்தம்
பலாப்பழங்களை கோத - வரும்
அணில் பிள்ளைகளை
கல்லாலெடுத்து அடிக்க
அழுது கொண்டோடும்
அணில் பிள்ளைகளை
பார்த்து ரசித்து
ஓ! எத்தனை நாள் எத்தனை நாள்.

ஓ! என் அருமைத் தமிழீழமே
நான் உன்னிடம்
ஓர் நாள் வருவேன்
அந்நியத் துப்பாக்கியிலிருந்து
என்னைப்பாதுகாக்க
ஆயுதங்களோடு
காத்து நிற்பார்கள்
என் சகோதரர்கள்.

# குட்டித்தமிழா நீ தூங்கு

குட்டித்தமிழா!
நீ தூங்கு
குண்டு மழை பொழிகிறதுதான் - ஆனாலும்
நீ தூங்கு.

பணமிருந்தும் - உனக்கு
பாலில்லைத்தான் - ஆனாலும்
நீ தூங்கு.

பயிர் செய்ய நிலமிருந்தும் - நீ
பட்டினிதான் - ஆனாலும்
நீ தூங்கு.

பள்ளியிருந்தும் - உனக்கு
படிப்பில்லைத்தான் - ஆனாலும்
நீ தூங்கு.

கோயிலிருந்தும் - நீ
கும்பிட முடியாதுதான் - ஆனாலும்
நீ தூங்கு.

உன்னை பாலூட்டி வளர்த்த
என் மார்பையும்
துப்பாக்கிக் குண்டுகள்
துளைக்கலாம் - ஆனாலும்
நீ தூங்கு.

எக்காலத்திலும்
எதிரியின் காலடியில்
வீழ்ந்து விடாதே!
உன் எதிர்காலமே
சூனியமாகி விடும்.

"பாரீஸ் ஈழநாடு" வில் வெளியான கவிதை

# தமிழ் நெப்போலியர்கள்


ஈழ நாட்டில்
என் பிஞ்சுப் பருவத்தில்
நெப்போலியனின் வீரத்தை
படித்தேன்.

அப்பொழுதே தமிழன்
சுதந்திரமிழந்துதானிருந்தான்.

என் வாலிபப்பருவத்தில்
என் தேசம்
அழுது கொண்டிருந்தது
நான் சுதந்திரமிழந்தவனாக
சுகந்தேடி
நெப்போலியன் பூமிக்கு வந்தேன்.

நெப்போலியன் பூமியில் - இன்று
தமிழ் அகதியாக
தமிழன் சுதந்திரத்திற்காக போராடும்
தமிழ் நெப்போலியர்களின் வீரத்தை
பாரீஸ் ஈழநாடு
பத்திரிகையில்
படித்துக்கொண்டிருக்கின்றேன்.

"பாரீஸ் ஈழநாடு" வில் வெளியான கவிதை
28.03.1992



## தூங்காதே தமிழா

தூங்காதே தமிழா!
தூங்காதே!

உன் இதயத்தொழிற்சாலைக்குத்
திறப்பு விழா நடத்து
உன் எண்ண உற்பத்திகளைச்
சர்வதேசத்தை நோக்கிச்
சந்தைப்படுத்து

உன் மூளையைக்
குடும்பமெனும் கதவால்
மூடாதே
உன் எண்ண அலைகள்
உலகத்தின் கரைகள் வரை
அடித்துச் செல்லட்டும்

அன்புத் தமிழா - நீ
அடிமையானாய்
அகதியானாய்
அதைவிட என்ன செய்தாய்?

மெஞ்ஞானத்தை அறிந்த நீ
விஞ்ஞானத்தில்
என்ன புதுமை செய்தாய்?
தூங்காதே தமிழா!
தூங்காதே
துள்ளி எழு
உலகம் உன்னை அறியட்டும்.

Goussainville தமிழ்ச்சோலை ஆண்டு விழாவில்
வாசிக்கப்பட்ட கவிதை - 27.03.1993

## வாழ்க்கைப் பயணம்

தமிழீழப் போராட்டப்பயணம்
விடுதலை வீரர்கள் எதிரிமுகாம்கள் நோக்கி
விடுதலைப் பயணம்

திருகோணமலையிலிருந்து
யாழ்ப்பாணம் வரை
போர்ப்பயணத்திலொரு
அகதிப்பயணம்

காடுகளிற்குள்ளாலொரு
கண்ணீர்ப்பயணம்

கொந்தளிக்கும் கடலலைகளிலொரு
படகுப்பயணம்
பச்சிளங் குழந்தைக்கொரு
பரலோகப் பயணம்

கொதிக்கும் வெயிலிலொரு
நடைப்பயணம்

பிறந்த மண்ணை விட்டொரு
பிரிவுப்பயணம்
இரத்தக் காயங்களோடொரு
இரவுப் பயணம்

தமிழீழ மக்களெல்லாம்
தலைவனின் வழிகாட்டலில்
வீர விடுதலைப் பயணம்
வாழ்க்கைப் பயணம்.

## தமிழ்ப்பெண்ணே

பெண்ணே!
தமிழ்ப் பெண்ணே
உன்னால் முடியும் முன்னேறு
தமிழ்ப் பெண்ணே!

ஆயுதம் ஏந்திப் போராடத் துணிந்துவிட்டாய்
தமிழ்ப்பெண்ணே - உன்
அடிப்படை உரிமைகளையும்
போராடத் துணிந்து நில்
தமிழ்ப் பெண்ணே!

நீ அழகான சேலை கட்டி
பதுமையாய் மெதுமையாய்
பரதம் ஆடினால் மட்டும் போதுமா?
உன்னைப் பற்றியிருக்கும்
அடிமைத் தளைகளை
அறுத்தெறிய வேண்டாமா?

நீ கோயிலுக்கு சென்று
கும்பிட்டு வந்தால்
சீதனமில்லாமல்
உனக்கொரு கணவன் கிடைத்து விடுவானா?
உன் நிஜ வாழ்க்கையை
நினைத்துப் பார் தமிழ்ப்பெண்ணே!

கண்ணே மணியே என்று
அழைத்துவிட்டால் - உன்
கை விலங்குகள் உடைந்துவிடுமா
தமிழ்ப் பெண்ணே!

கழுத்தில் நகை அடுக்கி
கையில் நகை அடுக்கி
காட்சிக்கு விடுவதற்கு - நீயென்ன
சேலைக்கடை பொம்மையா?
தமிழ்ப் பெண்ணே!

உன் கற்பை காக்க வேண்டுமென்றால்
கராத்தேயைக்கூட
கற்க வேண்டாமா?
தமிழ்ப் பெண்ணே!
நீ தினமும்

பதம் பார்த்து சமைத்தால் மட்டும் போதுமா?
தமிழ்ப் பெண்ணே - நாளை நீ
பறக்கும் விமானத்தை ஓட்ட வேண்டாமா?
தமிழ்ப் பெண்ணே!

வானொலியில் ஒலிபரப்பான கவிதை
14.03.1998



## உலகமெல்லாம் ஓடி ஓடி............?

எழவில்லையா!
என் தமிழ்ச்சகோதரர்களே
நீங்கள் - இன்னும்
எழவில்லையா?

அகதியானோம்
அடிமையானோம்
அதைவிட என்ன செய்தோம்.

ஆளுக்கொரு கோயிலமைத்து
அர்ச்சனை செய்தோம்
அதிலும் அமைதியிழந்தோம் - ஒரு
அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்தோமா?

நெருப்புக்காய்ச்சல் வந்தபோதும்
நேர்த்திக்கடன் செய்தோம்
நோய்க்கொரு மருந்தை கண்டுபிடித்தோமா?
அம்மனுக்கு
ஆயிரம் பவுணில் நகை சாத்தி
தேரில் ஏற்றி இழுத்தோம்
ஆஸ்பத்திரிகளை
அழுக்குப்பிடிக்க விட்டோம்.

தெருச்சந்தியில் நின்று
வீண்வம்பு பேசி மகிழ்ந்தோம்
விஞ்ஞானத்தில் என்ன செய்தோம்?

உலகமெல்லாம் ஓடி ஓடி
உழைத்தோம்
ஒலிம்பிக்கில் ஓடி
ஒரு பரிசு பெற்றோமா?

உலகமெல்லாம் அகதியாக
விமானத்தில் பறந்தோம்
விண்வெளியில்
என்ன செய்தோம்?

எழவில்லையா?
என் தமிழ் சகோதரர்களே
நீங்கள் இன்னும்
எழவில்லையா?

28.02.1998

## நாட்டுப் புதினம்

தினம் தினம்
எம் தேசத்தில்
நாட்டுப் புதினம்
என்ன புதினம்?

வானத்தில்
சிங்கள விமானங்களின்
இடி முழக்கங்களினால்
தமிழன் பூமியில்
தமிழனின் குருதி மழை

யுத்த காலங்களில்
மரண ஓலங்கள்
பட்டினிக் கோலங்கள்

தமிழனின்
வழிபடும் ஆலயங்கள்
தூக்க உறைவிடங்கள்

கை காலிழந்த தமிழனின்
வேதனை விம்மல்கள்

பெற்றோரை இழந்த
பிஞ்சுக் குழந்தைகளின்
பாசத்துடிப்புக்கள்

இதுதான்
எம் தேசத்தின்
வேதனை நிகழ்வுகள்
நாட்டுப் புதினங்கள்.

# குழந்தை துப்பாக்கி கேட்கிறது

குழந்தை துப்பாக்கி
கேட்டழுகிறது
பந்தோடு விளையாடும் பருவத்தில்
நொந்துபோன குழந்தையின் இதயம்
துப்பாக்கியோடு விளையாடும்
துர்ப்பாக்கிய நிலைக்குத் தயாராகிறது.

பஞ்சு போன்ற
பிஞ்சுக் கரங்களில்
துப்பாக்கி ஏந்தி
அஞ்சா நெஞ்சத்தோடு
ஆவலோடு போராடத் துடிக்கின்றனர்.

அன்றோ அம்மா என்பது
தமிழ் வார்த்தை
அதுதான் தமிழ்க்குழந்தையின்
முதல் வார்த்தை

பீரங்கிகள் போர்விமானங்கள்தான்
ஈழக்குழந்தைகள்
தமிழில் பேசும்
ஆரம்ப வார்த்தைகள்
இந்நிலையில் ஈழக்குழந்தைகள்
துப்பாக்கி கேட்காமலென்ன
தும்புமிட்டாயா கேட்பார்கள்?

## சமாதானம்

பாரீஸ் மாநகரில்
கோப்பைகளும் நானும்
எப்படி இந்த உறவு?
அகதி உறவு
அடிமை உறவு.

கோப்பைகளோடு என்னால்
ஐக்கியமாக முடியவில்லை
என் இதயம்
இலங்கையில் இருக்கிறது.

வேலை முடிந்துவிட்டது
வீடு செல்ல முடியவில்லை
கால் போன திசையில்
இலக்கின்றி நடக்கின்றேன்.

என் இதயம்
இலங்கையில் இறந்தகாலத்தை நினைக்கிறது.
இதுவரையில் குண்டுபட்டு
தலை பிளந்து
இரத்தம் சிந்தி
உடல் சிதைந்து இறந்துவிட்ட
என் எண்ணற்ற சகோதரர்கள்
என் மன மேடையில் நின்று
எக்காளமிட்டு சிரிக்கின்றார்கள்.

இறந்து போய்விட்ட
என் சகோதரர்கள்
என்னை நோக்கி கேட்கிறார்கள்
இலங்கையில் இன்னும்
சமாதானம் வரவில்லையா?

என் நெஞ்சு விம்முகிறது
தொண்டை அடைக்கிறது
என் கை விரல்கள்
கண்களைத் தொடுகிறது
கண்களில் கண்ணீர் வருகிறது.

அழுது கொண்டே சொல்கிறேன்
இல்லை சகோதரர்களே

இலங்கையின் சமாதானம்
புத்த பிக்குகளிடத்திலல்லவா
அடகு வைக்கப்பட்டிருக்கிறது.

இறந்துவிட்ட என் சகோதரர்கள்
என்னை நோக்கி சொல்லுகிறார்கள்
பொறுத்திரு சகோதரா
யுத்தம் தொடருமானால்
சிங்கள மக்களும்
உணவின்றி
உடையின்றி அலையப் போகிறார்கள்
அப்பொழுது சிங்கள மக்கள்
இலங்கையின் சமாதானத்தை
புத்த பிக்குகளிடமிருந்து மீட்பார்கள்.

நான் என் சகோதரர்களை நோக்கி
உரக்கக் கத்துகிறேன்
அந்த சமாதானம் எப்போது?
அது வரை குண்டும் இரத்தமுமா?
தமிழ் மக்களுக்கு பரிசு!

"சுட்டுவிரல்" பத்திரிகையில் வெளியான கவிதை



# ஒளியைத் தேடும் பயணம்

வண்டுகள்
இருட்டுகளிலிருந்து
ஒளியைத்தேடி
விளக்குகளை நோக்கி
பறந்து வருகின்றன.

வண்டுகளின்
வருகைக்காக
விளக்குகளின்
சொந்தக்காரர்கள்
விளக்கை
உடைப்பதில்லை.

வண்டுகளில் சில
விளக்குகளின்
வெப்பம் பட்டு
இறப்பதுமுண்டு
இறந்தாலும்
ஒளிக்கு வழிகாட்டிய
வண்டுகள்
இந்த வீர வண்டுகள்தான்.

இருண்ட இரவுகளில்
தவிக்கும் மக்கள்
வெளிச்சத்தைத் தேடி
விடி விளக்குகளை நோக்கிப்
புறப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

விளக்குகளின்
சொந்தக்காரர்களென
உரிமை கொண்டாடும்
அரசியல்வாதிகள்
மக்களை வெளிச்சத்திற்கு வர
விடுவதேயில்லை.
வெளிச்சத்தில்
இவர்களின்
போலி வேடங்கள்
சுய இலாபங்கள்
தெரிந்து விடுமென்பதனால்
விளக்குகளையே
உடைத்தெறிந்து கொண்டிருக்கின்றார்கள்.

இப்பொழுது மக்கள்
இருண்ட இரவுகளில்
ஆயுதங்களை ஏந்திக்கொண்டு
ஒளியைத்தேடிப்
பயணமாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

Goussainville தமிழ்ச்சோலை ஆண்டு விழா மலரில் வெளியான கவிதை - 03.10.1990



# என் பாதையில்...............

நான்
என் வாழ்க்கைப்பாதையில்
நானாக நடக்கின்றேன்.

பாதை முழுக்க
நெருஞ்சி முள்ளுகள்
என் பாதங்களை
பதம் பார்க்கின்றது.

சில மனித நெருஞ்சி முள்ளுகள்
என் நெஞ்சத்தையே
காயப்படுத்தியிருக்கிறது - ஆனாலும்
என் இலக்கை நோக்கி
நடக்கின்றேன்.

என் வாழ்க்கைப்பாதையில்
நான் உண்ண வேண்டுமென்பதற்காக
இன்னொரு மனிதன்
பசியால் வாட வேண்டாம்.

நான் உறங்க வேண்டுமென்பதற்காக
இன்னொரு மனிதன்
கண் விழித்திருக்க வேண்டாம்.

என் செல்வ சேமிப்பிற்காக
இன்னொரு மனிதன்
வறுமையால் வாட வேண்டாம்.

நான் சிரிக்க வேண்டுமென்பதற்காக
இன்னொரு மனிதன்
அழ வேண்டாம்.

இலக்கை அடையுமுன்னரே
கல்லில் அடிபட்டு
பாதையில் விழுந்தவனை
பாசத்தோடு அணைத்து
அழைத்துச் செல்வோம்.

23.03.1992

# நண்பன்

என் மாளிகையில்
செல்வத் தென்றல்
வீசிய போது
புதிது பதிதாய் நண்பர்கள்.

என் மாளிகையில்
வறுமைப் புயலடித்தபோது
வாழ்க்கைத் தூண்களே
முறிந்து போயின
நண்பர்கள் வழிப்போக்கன்
வேடம் போட்டார்கள்.

என் காதல்
கானல் நீரான போது
என் இதயம்
இரத்தக்கண்ணீர் வடித்தது
என் கண்ணீரைத் துடைக்க
நட்புக்கரங்கள் வரவில்லை
நண்பர்கள்
காதலை விமர்சித்தார்கள்.

நோயுற்று
உறவற்றுக் கிடந்தேன்
உதவிக்கரங்கள் நீளவில்லை
நான் மரணித்தால்
மரணச்சடங்கிற்கு வருவார்கள்
நட்புக்காக
நாட்டு நடப்பிற்காக

வாழ்க்கைக்காக
பணத்தைத் தேடாமல்
பணத்திற்காக
வாழ்க்கையைத்தேடும் - இந்தப்
பாரினில் நட்பு ஏது?

23.01.1992

## நீதானின்று கதாநாயகன்

என் நண்பா!
நீதானின்று
கதாநாயகன்
கவலைகளால் - உன்
இதயத்தை
காயப்படுத்தாதே!

நீ அழாதே
அழுது கொண்டிருப்பவனின்
கண்ணீரைத் துடை!

இவ்வுலகில்
ஆண்டவனால் கொடுக்கப்பட்டிருக்கும்
ஆயுட்காலத்தில்
உன் நேரத்தில்
மகிழ்ச்சியாயிரு
அடுத்தவனையும்
மகிழ்ச்சிப்படுத்து

உன் இதயப் பூங்காவை
சுத்தமாக்கு
நன்னீர் பாய்ச்சு
உன்னிதயம் என்றும்
பசுமையாகவே இருக்கட்டும்!

19.02.1992

## நானும் கூடத்தான்

இங்கு பேசும்போது
எல்லோரும் நீதிபதிகள்தான் - ஆனால்
வாழ்க்கையில் எல்லோரும்
குற்றவாளிகள்
நானும் கூடத்தான்

இங்கு பேசும்போது
செல்வந்தன்கூட
ஏழைதான்

இங்கு பேசும்போது
கோழை கூட
வீரன் தான்

இங்கு பேசும்போது
சோம்பேறி கூட
உழைப்பாழிதான்

இங்கு பேசும்போது
முட்டாள் கூட
புத்திசாலிதான்

இங்கு பேசும்போது
கஞ்சன் கூட
பாரி வள்ளல்தான்

இங்கு பேசும்போது
விபச்சாரியும் கூட
பத்தினிதான்.

06.02.1992

# வெற்றி மெதுவாகத்தான் வரும்

சிந்தி செயல்படு
இந்த உலகம் உனக்கு
முட்டாள் பட்டமும் சூட்டலாம்
முடிசூட்டு விழாவும் நடாத்தலாம்
ஆனாலும் - நீ
சிந்தி செயல்படு

இந்த உலகம்
புத்திசாலியை பைத்தியக்காரனாக்கும்
பைத்தியக்காரனை புத்திசாலியாக்கும்
ஆனாலும் - நீ
சிந்தி செயல்படு

இந்த உலகம்
நல்ல மனிதனை கெட்டவனெனத் தூற்றும்
கெட்ட மனிதனை நல்ல மனிதனென பாராட்டும்
ஆனாலும் - நீ
சிந்தி செயல்படு

இந்த உலகம்
வீரனை கோழையாக்கும்
கோழையை வீரனாக்கும்
ஆனாலும் - நீ
சிந்தி செயல்படு

உன் பலமும் பலவீனமும்
உனக்குத்தான் தெரியும்
வாழ்க்கை விமானத்தை
வழியில் நிறுத்தாதே
தோல்வி விரைவாகவே வரும்
வெற்றி மெதுவாகத்தான் வரும்.

# ஊருக்காக அழுகிறார்கள்

நான் சிரிக்கின்ற போது
சிரிப்பதற்கு
உறவுகள் ஏராளம்

நான் அழுகின்ற போது
அழுவதற்கு இருக்கும்
உறவுகள்
ஒன்று இரண்டுதான்
அந்த உறவுகளும்
அழுது கொண்டிருந்தால்
அழும் மனிதனிற்கு
அழுது கொண்டிருப்பவர்களால்
ஆறுதல் சொல்ல முடியுமா?

உலகத்து மனிதர்கள்
ஏதோ ஒன்றுக்காக
அழுது கொண்டுதானிருக்கிறார்கள் - ஆனால்
அழுது கொண்டிருப்பவர்கள்
சிரிக்காதவர்களுமல்ல
சிரித்துக்கொண்டிருக்கும்
மனிதர்களெல்லாம்
அழாதவர்களுமல்ல - ஆனால்
சில மனிதர்கள்
உள்ளுக்குள் அழுதுகொண்டு
ஊருக்காக சிரிக்கிறார்கள்
சில மனிதர்கள்
உள்ளுக்குள் மகிழ்ந்து கொண்டு
ஊருக்காக அழுகிறார்கள்.

# குழந்தை மனிதர்கள்

தன்னிடம்
உண்மை பேச வேண்டுமென
எண்ணும் மனிதன்
பிறரிடம்
உண்மையை மறைக்கிறான்.

தன் செல்வத்தை
பிறர் அறிய
விரும்பாத மனிதன்
பிறர் செல்வத்தை
அறியத் துடிக்கின்றான்.

தன் அறிவை
பிறரோடு
பகிராத மனிதன்
பிறர் அறிவையறிய
பின்னால் அலைகின்றான்.

தன் ஆற்றலை
பிறரோடு
பகிராத மனிதன்
பிறர் ஆற்றலை
பகிர்ந்து கொள்ள
அன்பாய் நடிக்கின்றான்.

# உனக்கு வெற்றி காத்திருக்கிறது

ஏ சகோதரனே
ஏன் சாக்கடையில் அமர்ந்துவிட்டாய்
இந்தச் சமுதாயமே சாக்கடையென்பதால்
சாக்கடையில் அமர்ந்துவிட்டாயா?

அது உண்மையல்ல
நீ எழுந்து நட
பேசிக்கொண்டே நடப்போம்
உனக்குத் தாகமாக இருக்கிறது - இந்தத்
தண்ணீரைக் குடி - இதுவும்
விலை கொடுத்து வாங்கியதுதான்
இந்த உலகில்
எது இலவசமாகக் கிடைக்கிறது.

கடவுளே கடவுளேயென்றால் - உன்
கண்ணீர் நின்றுவிடுமா? - உன்
கவலைகள் அகன்றுவிடுமா?
கடவுள் உனக்கு
மூளையையும் தந்து கால்களையும் தந்தது எதற்காக?
மூளையைக்கொண்டு நட என்றுதானே.

போராடத் துணிவிருந்தால் - இந்தப்
பூமியில் வாழலாம்
போராடும் மனத்தையிழந்தால்
நீ மறைவதற்கு முன்
உன் பெயர்கூட உன்னை விட்டு மறைந்துவிடும்.

ஓர் கோழையை
ஓர் கோழைப்பெண்கூடக் காதலிப்பதில்லையே
அவளும் வீரனையல்லவா விரும்புகிறாள்.

ஒன்றுமில்லாதவன் கூட
ஒன்றுமில்லாதவனை நேசிப்பதில்லை
சமுத்திரத்தில் நீந்தும் சின்ன மீனைப்பார்
யார் நீந்தக் கற்றுக்கொடுத்தது?

வான வெளியில் பறக்கும்
சிட்டுக்குருவியைப் பார்
யார் பறக்கக் கற்றுக்கொடுத்தது?

நீ சுவாசிக்கும் காற்றைக்கூடப்
போராடியல்லவா சுவாசிக்க வேண்டியிருக்கிறது
போராடாமல் இங்கு எது கிடைக்கிறது
சகோதரா?
போராடினால் எல்லாமே கிடைக்கிறது.

வல்லது மிஞ்சும்
அல்லது அழியும் - இதுவல்லவா
வாழ்க்கைத் தத்துவமாக இருக்கிறது.

சகோதரா?
இந்த உண்மைகள்
உன் உள்ளத்தைத் தொடவில்லையா
உன் தோள்களைக் குலுக்கு
தலையை நிமிர்த்தி நேரே நட
திரும்பிப் பார்த்து நட
சில ஏமாற்று மனிதர்கள்
முதுகில் குத்தக் காத்திருக்கிறார்கள்
தொலை தூரத்தில்
உனக்கு வெற்றி காத்திருக்கிறது.

"சுட்டுவிரல்" பத்திரிகையில் வெளியான கவிதை

## காதல் கொக்கு

என் இதயப்பூங்காவில் - ஒரு
அழகான தாமரைக்குளம்
பல கொக்குகள்
தீன் தேடி
பறந்து வருகின்றன.

தீன் இல்லையென்றால்
பல கொக்குகள்
பக்கத்து தாமரைக்குளங்களிற்கு
பறந்தோடி விடுகின்றன.

ஒரேயொரு கொக்கு மட்டும்
தினமும் பறந்து வந்து
சோகமாக
காதல் தவம் புரிகிறது.

அது இப்பொழுது
தாமரைக்குளத்தை
சொந்தமாகக் கேட்கிறது - திருமண
பந்தமே உன்னோடுதானென
உறுதியாகக் கூறிவிட்டேன்.



# கடதாசி வாழ்க்கை

அன்று
நிலா வெளிச்சத்தில்
மணல் முற்றத்தில்
நீயும் நானும்
ஒருவர் மடியில் ஒருவர்
வசந்தகால அணைப்புக்கள்

இன்று
நான் அந்நிய தெருக்களில்
தன்னந்தனியனாக

உன் கடிதத்தின்
கண்ணீர் வரிகள்
சொல்ல முடியாத சோகங்கள்
வார்த்தைகளுக்குள்
மறைந்து நிற்கும்
ஏக்கங்கள்
ஆசைகள்

என் பதில் கடிதத்தில்
வேதனை விம்மல்கள்
ஒரு அகதியின் பரிதாபங்கள்

என் கனவில் நீ
உன் கனவில் நான்
எங்கள் வசந்தகாலம்
கடதாசி வாழ்க்கையில்
கரைந்து கொண்டிருக்கிறது

நாமெங்கு?
எப்போது இணைவோம்
இந்தக் கேள்விக்கு பதில்
உன்னிடத்திலுமில்லை
என்னிடத்திலுமில்லை
எங்கள் தேசம் விடுதலையால் மலரும் போது
எங்கள் வாழ்வும் மலரும்.

"சுட்டுவிரல்" பத்திரிகையில் வெளியான கவிதை
19.02.1992

# தயவுசெய்து மனம் திருந்துங்கள்

பூக்களை நேசிக்கும்
புல்லினங்களை நேசிக்கும்
மானிட இதயங்களே
நான் உங்களை அழைக்கின்றேன்
பூமித்தாய் பற்றிப் பேச...

கற்கால மனிதன் கல்லை உரசி
தீயை கண்டு பிடித்தான்
நவீன மனிதன் அதே தீயை
மானிடர்களின் தலையில் மூட்டினான்

ஆதி மனிதன் கத்தி செய்தான்
காட்டை வெட்டினான் கழனியாக்கினான்
நவீன மனிதன் அதே கத்தியால்
மானிடர்களின் கழுத்தையே வெட்டினான்

ஆக்க சிந்தனை கொண்ட மனிதனால்
விஞ்ஞானம் விண்ணை தொட்டுவிட்டது
அழிவு சிந்தனை கொண்ட மனிதன் மூட்டிய தீயினால்
பூமித்தாய் எரிந்து கொண்டிருக்கிறாள்

ஆக்கிரமிப்பாளர்களின் குண்டுகளினால்
பூமித்தாய் உயிருக்காகப் போராடுகிறாள்
நச்சுப்புகையினால் மூச்சுத்திணறுகிறாள்
மனிதர்களே தயவுசெய்து மனம் திருந்துங்கள்

பூமித்தாயின் இதயத்தில்
காதை வைத்துக் கேளுங்கள்
அவளின் இதயம் வேதனையில் அழுவதை
நீங்களும் உணர்வீர்கள்.

11.11.2005

# விவாகரத்து வேண்டாம்

என் இனிய ரோஜாவே!
நான் பல காலம்
பார்த்து பறித்த
ரோஜா - நீ

பக்கத்து ரோஜாக்கள் - சில
என்னைப் பார்த்து
கண் சிமிட்டியிருக்கலாம் - அது
கானல்நீர் என்பதென்
கண்களுக்குத் தெரியாதா?

சந்தேக அம்புகளை
என்னை நோக்கி
எய்யாதே! அது
என் இதயத்தை
கிழித்து விடும்.

தீ(ய) வார்த்தைகளை
என்னை நோக்கி
வீசாதே! அது
என் இதயத்தை
சுட்டெரித்து விடும்.

பார்வை ஏவுகணைகளை
என்னை நோக்கி
ஏவாதே ! அது
என் இதயத்தை
தகர்த்தெறிந்து விடும்.

சமாதானப் பூக்களால்
என் இதயத்தை
மெல்லத் தடவு - அதில்
தூசிகள் இருந்தாலும்
சுத்தமாகி விடும்
வீண் சண்டைகள் வேண்டாம்
விவாகரத்து வேண்டாம்.

## கடன்காரன்

பாரீசில்
உடல் இயங்க மறுத்து
ஒத்துழையாமை போராட்டம்
நடாத்தியது
முதலாளி
என் வேலையை
பறிமுதல் செய்துகொண்டார்.

மின்சாரக்கட்டணம்
செலுத்தாததால்
என் வீட்டு
மின்சார விளக்குகள்
தற்கொலை செய்துகொண்டன.

தொலைபேசிக்கட்டணம்
செலுத்தாததால்
என் வீட்டு தொலைபேசி
கொலை செய்யப்பட்டு
உயிரற்று
பேசாமல் கிடந்தது.
மறு உயிர்ப்பிச்சை கேட்டேன்
குற்றப்பணம் கேட்டார்கள்.

நான் தூங்கும் நேரத்தில்
வட்டிக்கடன்காரன்
கதவைத்தட்டினான்.


21.01.1993

# நிர்வாணக் குழந்தைகள்

நானின்று
நாய்கள்
ஆடையணிந்து
பயணம் செய்யும்
பாரீஸ் நாட்டில்

என் ஆசியாக்கண்டத்தை நோக்கி
மன விமானத்தில் பறக்கின்றேன்.
ஆடையின்றி
அழுது திரியும்
ஆசியக்குழந்தைகள் - என்
இதயக்கதவைத் தட்டுகிறார்கள்.

19.02.1992



## என் இனிய காதலிக்கு. . .

நீல வானை ஒத்த விழிகள் கொண்டாள்
வெள்ளை நிற மேனி கொண்டாள்
வந்தோரை வரவேற்கும் பண்பு கொண்டாள்
சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவ கொள்கை கொண்டாள்

சிறீலங்கா அரக்கி என்னை விரட்டிய வேளை
வா என்றழைத்து வாரியணைத்தாள்
உணவு, உடை, உறையுள் தந்து வாழவைத்தாள்
வாழ்வுரிமை அத்தனையும் தந்து மகிழ வைத்தாள்

இத்தனை கவிதையையும் நானிருந்து எழுத
இடம் தந்து கௌரவித்தவளே!
"கவிதை சிந்தும் கண்ணீரில்" நன்றியுணர்வோடு
நான் அழுது உன் விழிகளையும் நனைக்கின்றேன்

மடியில் என்னை ஏந்தி வளர்த்து விட்டவள் தமிழீழத்தாய்
என் உயிர் காத்தவள் என் இனிய காதலி பிரான்ஸ்
நன்றி சொல்லும் தருணத்தில் நானுனை மறப்பேனா?
துயர் உனக்கு வந்தால் நன்றிக்கடன் செலுத்தாமல் இருப்பேனா?

# ஏழை இந்தியா

அதோ!
அந்த இந்திய ஏழை
ஏன் அழுகிறான்?

பட்டாடை கேட்டு அழுகிறானா? இல்லை
பஞ்சு மெத்தை கேட்டு அழுகிறானா? இல்லை
பட்டினியால் அழுகிறான்.

அதோ!
அந்த இந்திய ஏழை
வயல் வெளிகளில்
அறுவடை செய்தும்
ஒரு பிடி சோற்றுக்காக அழுகிறான்.

ஓ!
அந்த ஏழைக்கு
உழைத்தும் உணவில்லையா?
இந்திய ஏழைகளின் உழைப்பு
யாரால் கொள்ளையடிக்கப்படுகிறது?

என் தமிழகத்து சகோதரர்களே!
இது தமிழீழ நாட்டின் புதல்வனின்
ஒரு அன்பு வேண்டுகோள்
கொள்ளையர்களை இனியும்
பதவி நாற்காலிகளில் அமர்த்தாதீர்கள்.

07.09.1992

## மேகங்களே! மேகங்களே!

மேகங்களே! மேகங்களே!
எங்கே செல்லுகிறீர்கள்
நன்றியில்லா உலகத்தைப் பார்த்து
நழுவிச் செல்லுகிறீர்களா?

மேகங்களே! மேகங்களே!
பயணிக்கும் பாதையெங்கும் - இந்த
வாழும் உலகத்திற்கு
பணத்தைக் கொட்டிவிட்டுச் செல்லுங்கள் - இல்லையேல்
வாழும் பண்பையாவது சொல்லி விட்டுச் செல்லுங்கள்.

மேகங்களே! மேகங்களே!
அன்பு பாசம் எல்லாம் - இங்கு
எங்கே இருக்கிறது - அது
அடிவயிற்றுப் பசிக்கு அடங்கியிருக்கிறது.

மேகங்களே! மேகங்களே!
அரசியல்வாதிகள்
பதவிக்கடலில் சுழியோடிக்கொண்டிருக்கிறார்கள்.

மேகங்களே! மேகங்களே!
மதவாதிகளின் தோள்களில்
பணப்பேய் தொற்றி
உலகவலம் வருகிறது.

உண்மையானவர்களே - இன்னும்
உறங்கிக் கொண்டிருக்கிறீர்களா?
இந்தப் பூமிக்கு
ஏழைகளின் இரத்தமும் கண்ணீரும்
இன்னும் தேவையா?

மேகங்களே! மேகங்களே!
செல்லும் வழியில் - நீங்கள்
ஆண்டவனைப் பார்த்தால்
அகதிக் கவிஞன் ஒருவன்
முகவரியைக் கேட்டதாகச் சொல்லுங்கள்.

24.11.2000

# வைன் கோஸ்டிகள்

வைன் கோஸ்டிகள்
அழுக்காடைகள்தான்
இவர்களை இனம் காட்டும்
தேசிய ஆடைகள்

இவர்கள் யார்?
பாரீஸ் மாநகரத்தின்
முன்னை நாள் தொழிலாழர்கள்

வாழ்க்கையெனும்
சோகக்கடலிற்குள் நீந்தி
கரைசேர முடியாமல்
மூழ்கிப்போனவர்களா? இல்லை
பிரான்ஸ் தேசத்து
வைன் தெழிற்சாலைகளின்
விளம்பரதாரர்களா? இல்லை
பாரீஸ் மாநகரத்தின்
வனப்பற்றாக்குறையால்
மெற்றோக்களில்
வனவாசம் செய்கிறார்களா?

17.03.1989



## மான விற்பனை

அரபு நாடுகளில்
அடிமைகளாக
சிங்கள சகோதரிகளின்
கற்பு விற்பனையில் பெறும்
அந்நியச் செலாவணி

ஐரோப்பிய நாடுகளில்
தமிழ் அகதிகளின்
தன்மானத்தை இழந்து
உழைக்கும் உழைப்பில் பெறும்
அந்நியச் செலாவணி

அந்நியச் செலாவணியில்
ஆயுதம் வாங்கி
அழகான தீவை
சுடலையாக்கி
வீரம் பேசும்
சிங்கள அரசு.

# மானிட தினம்

மேதினங்கள் வந்து போயின - ஆனால்
இன்னமும் இந்தப்பூமியில்

இரவில் ஏழையொருவன்
கனவு காண்பான்
அறுசுவை உணவிற்கு
காலையில் எழுந்தவுடன்
பசியால் வெந்து எரியும்
அவன் வயிறு

பொய்கள்
காழி வேடம் பூண்டு
தலை விரித்தாடும்

ஆணவங்கள்
தலை நிமிர்த்தி சிரிக்கும்
ஏழை மானிடங்கள்
தலை குனிந்து அழும்.

போலிகள்
நிஜங்களாகி
ஜனநாயகப் பதுங்கு குளிக்குள்
தலையை மறைப்பார்கள்.

ஏழை நாடுகள்
பட்டினியால்
பாதி உயிரில் துடிக்கும்.

வல்லரசுகள்
சந்தையில் விலை போகாத உணவுகளை
கடலில் கொட்டி
தர்மம் பேசும்.

இந்த பூமிக்கு
இன்னொரு தினம் வேண்டும்
அது மானிட தினம்.

Goussainville தமிழ்ச்சோலை ஆண்டு விழாவில்
வாசிக்கப்பட்ட கவிதை - 01.05.1993

## ஏழைக்கடவுள்

அழகிய மாநகரத்திலே
உயர்ந்த மாளிகைகள்
நாகரீக நங்கையர்கள்

தெருக்கரையினிலே
சாக்கடை ஓரத்திலே
ஓர் ஓலைக்குடிசை - அதுவும்
ஓட்டைக் குடிசை

கிழிந்த ஆடைகள்
வரண்ட வயிறுகள்
மகிழ்ச்சியை
வறுமையிடம்
அடகு வைத்துவிட்ட
மானிடங்கள்

நாற்றமெடுக்கும் சமுதாயத்தினால்
குப்பையோடு
குப்பையாக வீசப்பட்ட
மானிடங்கள்.

எல்லோரும்
ஆண்டவன் குழந்தைகளென்றால்
இவர்களென்ன
ஏழைக் கடவுளின்
குழந்தைகளா?

"I.B.C" வானொலியில் ஒலிபரப்பான கவிதை

# அப்பா! என்னை விட்டு விடுங்கள்

அப்பா! என்னை விட்டு விடுங்கள்
எனது காதலன்
அவனது குடிசையில்
அழுது தேய்கிறான்

உங்கள் மணமகனின்
ரோஜா மாலைகளுக்காய்
எத்தனையோ அழகிகள்
காத்திருக்கிறார்கள்.

என் மனத்துள்ளிருக்கும்
ரோஜா மாலை
என் காதலனுக்கு மட்டும்தான்
அவன் என் ரோஜா மாலைக்காக காத்திருக்கின்றான்.

உங்கள் மணமகளின் சொத்துக்கள்
உங்கள் வாழ்க்கைக்கு துணை வரலாம் - ஆனால்
என் காதலன் மட்டும்தான்
என் வாழ்க்கைக்கு துணைவர முடியும்.

# மழைக்குடைகள்

குடிசை நோக்கி
தெருவில் செல்லும்
மனிதனுக்கு
மழை வந்தால்
குடைதான் பாதுகாப்பு
குடிசைக்குள் இருக்கும்போது
மனிதன்
குடையை நினைப்பதில்லை.

பதவியைத் தேடி
தேர்தலில் நிற்கும்
அரசியல்வாதிக்கு
மக்கள்தான் குடைகள்
பதவிகளை பெற்றுவிட்டால்
மக்களை நினைப்பதில்லை.



## புகைபிடித்த சுவர்கள்

இருபதாம் நூற்றாண்டின் - என்
இருபத்தாறாவது வயதில்
ஆசியாக்கண்டத்து
ஓலைக்குடிசையொன்றில்
இருக்கின்றேன்.

என்றன் சிந்தனை வலையை
இந்த உலகத்தை நோக்கி
வீசுகின்றேன்.

மனிதன்
காலடி எடுத்து வைக்கமுடியாத
காடுகளாக இருந்த உலகம் - இன்று
கண்ணாடி மாளிகைகளால்
அலங்கரிக்கப்பட்டிருக்கிறது.

அந்தக் கண்ணாடி மாளிகையிலும்
சாதி மதம் நிறம் கண்டு
சினேகம் கொள்ளும்
சில மனித உருவங்கள்
கோட் சூட்டிற்குள்
பதுங்கியிருக்கின்றன.

இந்த மனித உருவங்களின்
புகைபிடித்த
இதயச் சுவர்களிற்கு
எத்தனையாம் நூற்றாண்டில்
வெள்ளையடிக்கலாமென
எண்ணிக் கொண்டிருக்கின்றேன்.

"தென்றல்" இதழில் வெளியான கவிதை

## அன்பே ஆண்டவன்

அன்பு வற்றாத ஜீவநதி
கொடுத்துக் கொண்டேயிருக்கலாம்
குறைவில்லாதது
அழிவில்லாதது.

அன்பிற்கேது?
அளவு கருவி
அன்பை கொடுப்பவனே
அன்பின் ஆழத்தை
அளக்கக் கூடியவன்
அன்பை கொடுப்பவனே
அன்பை பெறவும்
தகுதியுடையவன்.

உருவமில்லாதது அன்பு - எங்கும்
வியாபித்து நிற்பது அன்பு
உலகத்தின் அத்திவாரமும் அன்பு.

உன் அன்பை - முதல்
உன் குடும்பத்திற்கு கொடு - பின்
ஊருக்கு கொடு - பின்
உலகத்திற்கே கொடு
அன்புதான் உலகத்தை
அமைதி கொள்ள வைக்கும் ஆண்டவன்.

17.12.1990

## உலகம் அழுகிறது

ஆண்டுகள் கழிகிறது - ஆனால்
அகிலத்தின் அழுகுரல்கள்
ஓயவில்லை.

சாதிகள்
சாகவில்லையாததால்
சண்டை பிடித்தழியுதொரு
மக்கள் கூட்டம்.

வறுமைச் சேற்றுக்குள்
கால்களைப் புதைத்ததால்
மீள முடியாமல் தத்தளிக்குதொரு
மக்கள் கூட்டம்.

ஆயுதம் செய்து
மனித இரத்தத்தில்
மாடிகள் கட்டுது - சில
வல்லரசுப் பேய்கள்.

போதை மருந்தால்
பாதை மாறி
வழி தெரியாது தத்தளிக்குதொரு
வாலிபப் பட்டாளம்.

காமமே வாழ்க்கையாகி
விபச்சாரிகள் வீட்டினுள்
விளக்கெரிய வைக்குதொரு
வாலிபப் பட்டாளம்.

23.01.1992

## மக்கள் சேவையே மகேசன் சேவை

பரமசிவன் கோவிலிலே தேரோட்டம்
பக்கத்து வீட்டினிலே உயிர்ப் போராட்டம்
கோவிலிலே திருவிழாக் கொண்டாட்டம்
வீட்டினிலே வறுமைத் திண்டாட்டம்.

பரமசிவனிற்கு பாலோடு தேன் கலந்தபிசேகம்
பக்கத்திலே ஒரு வேளை உணவிற்கு திண்டாட்டம்
பரமசிவனிற்கு ஆடை அணிகலன்கள்
பக்கத்து குழந்தை நிர்வாண கோலம்

பரமசிவன் தேருக்கு தேர்முட்டிகள்
பக்கத்து ஓலைக்குடிசையிலும் ஓட்டைகள்
பரமசிவனிற்கு தேரூர்வலம்
பக்கத்து குழந்தைக்கு மரண ஊர்வலம்

பரமசிவன் கோவிலில் ஓடிய பாலும் தேனும்
பக்கத்து ஏழைகளிற்கு எட்டியிருந்தால்
எத்தனை இதயங்கள் சிரித்து வாழும்
பல்லாண்டு காலம் வாழ்ந்து சாகும்.

ஏழை இதயங்களின் வறுமை பெருமூச்சுக்கள்
பணக்காரர்களின் காதுகளில் கேளாதா?
ஏழைகளிற்கு நல்ல வாழ்வுதான் கூடாதா?
பாரினிலே சமதர்ம வாழ்வொன்று மலராதா?

1984

# சுதந்திரப் பூவைப் பறி

என்னுயிர்
மலையகத்து சகோதரனே!
நீ சவாரிக்குதிரையா?
துரைமார்கள்
உன் முதுகிலிருந்து
சவாரி செய்ய?

வெள்ளையர்களிட்ட
கடிவாளங்களை
தாலிக்கயிறுகளென
உன் பாட்டனார்
நினைத்திருக்கலாம் - ஆனாலவை
தூக்குக்கயிறுகளென்பது - உனக்குத்
தெரிகிறதல்லவா?

உன் பாட்டனார்
பறி கொடுத்த
சுதந்திரப்பூவை
மலையகத்து மண்ணிலேயே தேடு.



# மானிடத்தின் விலை என்ன?

நேற்று மனிதன்
மண்ணை விற்றான்
பெண்ணை விற்றான்

மனிதனே
மனிதனைப் பிடித்து
அடிமையாக விற்றான்
மனித அங்கங்களையும் விற்றான்.

தண்ணீரை விற்றான்
தன் குழந்தைகளையும் விற்றான்.

நாளை மனிதன்
காற்றையும் பிடித்து பையில்
கட்டி விற்பான்.

நெருப்பையும் பிடித்து
அடைத்து விற்பான்.

ஏன்?
நிலாவையும் நட்சத்திரங்களையும் கூட
பிடித்து விற்பான்.

முதலாளித்துவ சந்தையில்
மானிடம் எல்லாம்
கடைச் சரக்குகள்.

29.04.1993

# தட்டுங்கள் திறக்கப்படும்

எல்லாம் இழந்துவிட்ட
அகதித் தமிழன்
உயிரை மட்டும்
இழக்க விரும்பாமல்
கண்ணீர் சிந்திக் கொண்டு
தமிழகத்தின் வாசற்கதவுகளை
தட்டுகிறான்
கதவுகள் திறக்கப்படவேயில்லை.

கண்ணீர் சிந்தச் சிந்த
கப்பலிலேற்றி
தமிழீழத்தின் கரைகளிற்கு
தள்ளப்பட்ட தமிழன்
மீண்டும் திரும்பி வந்து
தமிழகத்தின் கதவுகளை
தட்டுகிறான்.

பால் குடித்த குழந்தை
மார்பில் கடித்ததற்காக
பெற்றெடுத்த தாய்
குழந்தையைத் தூக்கி
கொதிக்கும் நீரில் இடுவாளா?

ஏழை அகதித்தமிழா!
நீ தட்டிக்கொண்டேயிரு
கதவுகளிற்கு அருகாமையில்
காலடிச் சத்தங்கள் கேட்கிறது
கதவுகள் திறக்கப்படும் நேரம்
நெருங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழகத்து சகோதரர்களே!
தாயகத்தில் துயர் சூழ்ந்தால்
கடலைக்கடந்து வந்து
தமிழீழத்தின் கதவுகளைத் தட்டுங்கள்
கதவுகளைத் திறந்து
கண்ணீரைத் துடைத்து
கட்டியணைப்போம்.

26.09.1992

# துயிலும் இல்லங்கள் மீண்டும் துளிர்க்கின்றன.......

மாவீரர்களே!
என் சகோதரர்களே - நீங்கள்
மரணித்த பின்பும் போராடிய
மாவீரர்கள்

நீங்கள் இருந்த போதும்
போராடினீர்கள்
நீங்கள் இறந்தபோதும்
போராடினீர்கள்

நீங்கள் எதிரி முகாம்களோடு
போரிட்டு வென்றீர்கள்
எதிரிகள் உங்கள் கல்லறைகளோடு
போரிட்டும் தோற்றார்கள்

உங்கள் துயிலும் இல்லங்கள் கூட
எதிரிகளை அச்சுறுத்தின
அதனால்தான் - உங்களை
" புல்டோசர் " கொண்டு அழித்தார்கள்

மாவீரர்களே!
நீங்கள் மீண்டும் மீண்டும் வென்றீர்கள்
இதோ! உங்கள் துயிலும் இல்லங்கள்
மீண்டும் துளிர்விடுகின்றன.

"மாணவன்" இதழில் வெளியான கவிதை

# எப்பொழுதும் நீ மாணவன்தான்

பூவைப் போன்ற குழந்தையே! உன்
பூ விழிகளால் பார்த்தது
சின்ன இதழ்களால் சிரித்து
அம்மாவைத் தேடும் அந்தப் பொழுதினில்
நீ கற்கத் தொடங்குகிறாய்
அப்பொழுதும் நீ மாணவன்தான்.

தத்தி தத்தி நடந்து
தள்ளாடி விழுந்து
வலியை உணர்ந்து
அழுத அந்தப் பொழுதினில்
நீ நடக்கக் கற்றுக் கொள்கின்றாய்
அப்பொழுதும் நீ மாணவன்தான்.

பள்ளி சென்று - பின்பு
கல்லூரி சென்று
கணித பாடத்திற்காக
கவலைப்பட்ட
அந்தப் பொழுதிலும் நீ மாணவன்தான்.

பல்கலைக்கழகம் சென்று
பல் கலையும் பயின்று
பட்டப்படிப்பு முடித்த
அந்தப் பொழுதிலும் நீ மாணவன்தான்.

உன் வாழ்க்கைத் துணையைத் தேடி
கூடி வாழ்ந்து
குழந்தைகள் பெற்ற
அந்தப் பொழுதிலும் நீ மாணவன் தான்.

வாழ்க்கையை கற்று
முதுமையை உணர்ந்து
மரணத்தை அறிந்து
மரண நேரத்தை எதிர்பார்க்கும்
அந்தப் பொழுதிலும் நீ மாணவன்தான்
ஆகையால் நீ எப்பொழுதும் மாணவன்தான்.

"மாணவன்" இதழில் வெளியான கவிதை

# விடுதலைத் தலைவன்

விடுதலைத் தலைவனே!
நீயோ சுதந்திரச் சமுத்திரம்
நானோ சின்னத் தோணியில்
மிதந்து வரும் புலக் கவிஞன்.

தமிழீழக் கடலலைகள் கூட
ஒன்றுடன் ஒன்று மோதிப்
போராடும்படி புத்தி சொன்னது.

தமிழீழ வானம் கூட
இடியால் முழங்கிப்
போராடும்படி கட்டளையிட்டது
நாம் மட்டும் வீணர்களாயிருந்தோம்.

நீயோ போராளித் தமிழனாக மாறினாய்
சுதந்திரத் தமிழனாக நிமிர்ந்தாய்
எம்மையும் நிமிர்த்தினாய்

உன் கண்கள் பாய்ச்சும் இலட்சிய ஒளி
தமிழீழத்தின் மூலை முடுக்கெல்லாம் பட்டுத் தெறிக்கிறது
உன் கம்பீரம் வெளிநாட்டு விருந்தாளிகளையும்
வியக்க வைக்கிறது.

வானத்தைக் கடந்து கடல்களைக் கடந்து
தமிழர் இதயங்களிலெல்லாம் விடுதலை
வேர்களைப் பரப்பிய மூலவேர் நீ

தமிழீழத்தின் பொருளாதாரத் தேரை
தமிழீழ வீதியெங்கும் இழுக்க வைத்த
தமிழ்ப் புதல்வன் நீ

தமிழீழத்தாயின் குருதிச்சுற்றோட்டத்தை
நாடி பிடித்து வைத்திருக்கும்
நல்ல மருத்துவன் நீ

என் வீட்டுச்சுவரில் இருக்கும்
உனது புகைப்படம் கூட
நான் சோர்ந்திருக்கும் வேளைகளில்
எனக்கு உற்சாகம் ஊட்டுகிறது.

உன் ராணுவப் புலமை கண்டு
உன் அரசியல் ராஜதந்திரம் கண்டு
உலகமே உன் பெயரை உச்சரிக்கிறது

எதிரிகளுக்கு நீ நெருப்பாக இருந்தாய்
செஞ்சோலைச் சிறார்களோடு பனியாய் உருகினாய்
தோழர்களுக்கு இனிய மாங்கனியாய் இனித்தாய்
துரோகிகளிற்கு அலரி விதையாய் கசந்தாய்

போர்க்காலத்தை விட சமாதானகாலம்
விழிப்பு வேண்டிய காலம் ஏனெனில்
இது துரோகிகளின் காலம் கூட

தமிழீழ தேசத்தின் உயிரை எடுக்கத்
துடித்துக்கொண்டிருக்கிறது
துரோகத்தனம் எனும் கொடிய நோய்
தொலை நோக்கோடு இதை அறிந்த நீ
தமிழ்த்தாயை உன் மடியில் வைத்து விழித்திருக்கிறாய்

பொருளாதார கட்டுமான காலத்தை வென்றுவிட்டால்
சுதந்திர காலம் எங்கள் கைகளில்
சுதந்திரத் தலைவனே உன்னோடு கைகுலுக்க
நான் ஆசை கொள்கிறேன் அந்த
நாள் மகிழ்ச்சியின் உச்ச நாள்

நன்றி சொல்ல விரும்புகிறது என் கவி உள்ளம்
ஆயிரமாயிரம் ஆனந்தப் பூக்கள் என் இதயத்துள் மலர்கின்றன

உன் ஐம்பதாவது அகவையிலாவது
நான் பாராட்டுக் கவிதை வாசிக்காவிட்டால்
உன் காலத்தில் நான் வாழ்வது வீண்
உனக்காக கவிதை எழுதும் போது
என் விரல்களிற்கு கூட வீரம் வருகிறது

விடுதலைத் தலைவனே
பல நூறு கவிஞர்கள் கவிப் பூக்களால்
விடுதலை மாலை தொடுப்பார்கள் - அதில்
எனது கவிப் பூவும் ஒன்று.

"நிகரிலா நெஞ்சன்" நூலில் வெளியான கவிதை

# இரத்தத்தால் எழுதும் வரலாறு

பூமியின் வரலாறு
இரத்தத்தால் எழுதப்படுகிறது

மனிதனின் குருதியை
காகங்கள் விழா எடுத்து குடிக்கிறது

மனித அங்கங்கள்
அடுப்பில் எரியும் விறகாக
மதிக்கப்படுகிறது

வர்ணத் தொலைக்காட்சிக்கு
சிவப்பு நிறம் தேவையில்லை
மனித இரத்தமே போதுமானது

ஆதிக்க வல்லரசுககளின் எல்லையை
அகலப்படுத்த போடும் அத்திவாரத்திற்கு
மனித உயிர்கள் கற்களா?

வானொலி அறிவிப்பாளர்களிற்கு
குண்டு வெடிப்புக்களை அறிவித்தே
குரல் அடைத்து விடும் போல் இருக்கிறது

கடிதங்களில் நீ நலமா? என்பதை விட
எந்த நல்ல செய்தியும் இல்லை

பாக்தாத்தில் கணவன் இன்னும்
கடத்தப்படவில்லை போலும்
ஆறுதல் பெருமூச்சு விடுகிறாள்

மனித மூளைகளை
மானிட நேயம் நிறைக்கும் வரை
மரண ஓலங்கள்தான்.

t.t.n தொலைக்காட்சியில் " சித்திரம் பேசுதடி "
நிகழ்ச்சியில் வாசிக்கப்பட்ட கவிதை

## மரமே! மரமே!

மரமே! மரமே!
மங்கையிடம் உனக்கென்ன காதல்
மனிதர்கள் ஏமாற்றியதால்
மரமே உன்னிடம்
மங்கை காதல் தஞ்சம் கேட்டாளா?

மரமே நீ செழித்தால்
வழிப்போக்கர்கள்
உன் நிழலில் இளைப்பாறுவார்கள்

மங்கையின் மனம் செழித்தால்
வீடு செழிக்கும்
நாடு செழிக்கும்
உலகமே செழிக்கும்

மரம் பட்டால் விறகாகும்
மங்கையின்மனம் பட்டால்
குடும்ப வேரும் எரியும்

ஆணாதிக்க கோடரி கொண்டு
அவள் உணர்வுகளைத் தறித்தால்
அவள் மரமல்ல
அவள் சுதந்திரப் பெண்ணாக வருவாள்

இலையுதிர்கால மரம் போல
இருக்க மாட்டாள்
இளவேனிற்கால மரங்களைப்போல்
துளிர்ப்பாள்.

t.t.n தொலைக்காட்சியில் " சித்திரம் பேசுதடி " நிகழ்ச்சியில் வாசிக்கப்பட்ட கவிதை

## சிரி அம்மா சிரி

தமிழ்த்தாயே சிரியம்மா சிரி
போருக்குள் சிரிப்பை தொலைத்து விட்டாயா?

மரணங்களைப் பார்த்துப் பார்த்தே
மனக் குளம் வற்றி விட்டதா?

இடம் பெயர்ந்து இடம் பெயர்ந்தே
இடுப்பு ஒடிந்து விட்டதா? - அதனால்தான்
இருந்து விட்டாயா?

போரில் யாரை இழந்து விட்டாய்
அடுப்பு மூட்ட மனமின்றி
அப்படியே இருந்து விட்டாய் அம்மா

தாகத்திற்கு தண்ணீர் குடிக்க விடாமல்
எதிரி தடுத்து விட்டானா?
பேசாமல் இருக்கிறாயே அம்மா?

சுதந்திரத்தை மீட்க வந்திருக்கும்
வீரப்புதல்வர்களைப் பார்த்து
ஒரு தடவையாவது சிரியம்மா சிரி

யார்? வருகைக்காக காத்திருக்கிறாயம்மா
தமிழீழ அரசொன்றின்
வருகைக்காக காத்திருக்கிறாயா?

t.t.n தொலைக்காட்சியில் " சித்திரம் பேசுதடி "
நிகழ்ச்சியில் வாசிக்கப்பட்ட கவிதை

# என்ன புத்தி சொல்ல வந்தாய்?

வாழைக்கனியை உண்டு
தோலைத் தெருவில் எறிய
சறுக்கி விழும் மனிதனுக்கு
பூமிக்குள்ளிருந்து
என்ன புத்தி சொல்ல வந்தாய்?

பூமியின் கனிகளை உண்டு
பூமிக்குள்ளேயே மடிந்துவிடும் மனித குலத்திற்கு
பூமியின் ஆற்றலை சொல்ல வந்தாயா?

குலை வர குட்டி போடும்
உன் குடும்ப ஒற்றுமையை
சொல்ல வந்தாயா?

மனித குலத்தினரே!
எனது அங்கங்களை அறுத்து
அதில் விருந்துண்ணுங்களென
சொல்ல வந்தாயா?

உனது தோலை உரித்து
மாலை கட்டி மாலை மாற்றி
மன ஒற்றுமையுடன் வாழுங்களென
மண மக்களுக்கு புத்தி சொல்ல வந்தாயா?

என்ன சொல்ல வந்தாய் வாழை மரமே!
என்ன சொல்ல வந்தாய்?

t.t.n தொலைக்காட்சியில் " சித்திரம் பேசுதடி "
நிகழ்ச்சியில் வாசிக்கப்பட்ட கவிதை

## அன்பான அம்மா

அன்பான அம்மா என்றவுடன்
எனது அம்மாவையும் கடந்து
எனது மனக் கண்ணாடி முன்
பட்டுத் தெறிப்பவர் அன்னை தெரேசா.

சுய நலக் குப்பைக்கு
தீ வைத்து விட்டு
பொது நலப் பூவை
இதயத்தில் பூக்க வைத்தவர்.

தீண்டத்தகாத நோயாளிகளையும்
தன் குழந்தைகளாக
நெஞ்சிலே அரவணைத்தவர்.

அன்பான குடும்பத்து அம்மா
அன்புக்கயிறால் குடும்பத்தை பிணைப்பவள்
அன்பான உலகத்து அம்மா
அன்புக்கயிறால் உலகத்தையே இணைப்பவள்.

அன்புதான் உலகத்திற்கு
ஒளியேற்றும் மின்சாரம்
அன்புதான் இணைக்கும் சக்தி
அன்புதான் ஆண்டவன்
அன்னை திரேசாவின் அன்பு
யாருக்கு வரும்?

t.t.n தொலைக்காட்சியில் " சித்திரம் பேசுதடி "
நிகழ்ச்சியில் வாசிக்கப்பட்ட கவிதை

## அன்பான அப்பா

அன்பு இயற்கையாக இருப்பது
அன்பு இயல்பாக இருப்பது
அன்பு பொதுவாக இருப்பது
அன்பு எல்லையின்றி இருப்பது - ஆனால்

சொத்தாசை கொண்ட அப்பா
பொன்னை மதிப்பார் அன்பை மதியார்
பண வலையில் சிக்கிய அப்பா
பண்பை இழப்பார்.

பதவி வெறி கொண்ட அப்பா
மதம் பிடித்த யானை ஆவார்
வட்டிக்கு பணம் கொடுத்த அப்பா
வன்முறையிலும் இறங்குவார்.

பொருளாதாரப் பொறிக்குள் சிக்காத அப்பா
பொன்மனச் செம்மலாவார்
ஆலயத்தின் அமைதியோடு அவர் வாழ்வார்
குழந்தைகளே செல்வமென அரவணைத்து மகிழ்வார்.

அன்புதான் ஆக்கமென அறிந்து வாழ்வார்
வன்பு அழிவென சொல்லி வாழ்வார்
அன்புதான் நிரந்தரமென நினைத்து வாழ்வார்
அவர்தான் அன்பான அப்பா.

t.t.n தொலைக்காட்சியில் " சித்திரம் பேசுதடி "
நிகழ்ச்சியில் வாசிக்கப்பட்ட கவிதை

## வெள்ளை மாளிகை

நீல வானமே உன்னை
நிமிர்ந்து பார்க்க எனக்கு நேரமில்லை

நீலக்கடலே உன்னில்
நீந்தி விளையாட எனக்கு சுதந்திரமில்லை

வெள்ளைக் கொக்குகளே உங்களை
பார்த்து ரசிக்க எனக்கு பாதுகாப்பில்லை

மணல் வெளியே உன்னில்
படுத்துறங்க எனக்கு விடுதலையில்லை

பச்சிளங் குழந்தைகளே கவனம்
வானத்தில் இயமனின் வாரிசுகள்

உங்கள் தலைகளில் குண்டுகளை வீசிவிட்டு
பயங்கரவாதத்திற்கெதிரான போரென
வெள்ளை மாளிகையில் அறிக்கை வாசித்து விடுவார்கள்.

t.t.n தொலைக்காட்சியில் " சித்திரம் பேசுதடி "
நிகழ்ச்சியில் வாசிக்கப்பட்ட கவிதை

# என் நினைவுக் கிணற்றின் ஆழத்தில்....

ஏய்! பூனையே உனக்கு
புத்தி சொல்லுமளவிற்கு நானொன்றும்
புனிதமானவன் கிடையாது.

சர்வாதிகாரக் கடலுக்குள் மூழ்கி
ஜனநாயகக் கரையை எட்டமுடியாத
மனித குலத்தின் வாரிசு நான்

தாயில்லா தருணம் பார்த்து
கோழிக் குஞ்சுகளின் கழுத்தை நெரிக்க
காத்திருக்கும் பூனையே!
நீ உன் இனத்தை கொல்லுவதில்லை - ஆனால்
மனிதன் மனிதனையே கொல்லுகிறானே!

தமிழீழப் போரில் காணாமல் போன
மகனின் வருகைக்காக காத்திருக்கும் தாயைப் போன்று
ஜனநாயகத்தின் வருகைக்காக காத்திருக்கிறோம்.

ஏய்! பூனையே உன்னைப் பார்க்கையில்
என் நினைவுக் கிணற்றின் ஆழத்தில்
ஒரு வல்லரசுப் பேய் நிழலாய்த் தெரிகிறது.

t.t.n தொலைக்காட்சியில் " சித்திரம் பேசுதடி "
நிகழ்ச்சியில் வாசிக்கப்பட்ட கவிதை

# இன்று மனிதன் பேசவில்லை

இன்று மனிதன் பேசவில்லை
ஆயுதங்கள் பேசுகின்றன.

வாழப்பிறந்த மானிடங்கள்
வாழாமலேயே மடிகின்றது.

மனிதர்கள் ஆயுதங்களை ஆளவில்லை
ஆயுதங்கள் மனிதர்களை ஆளுகின்றது.

மனிதன் சிந்தும் குருதியினால்
மாநகரத் தெருக்கள் நனைகிறது.

பாவி மனிதர்கள் சிந்தும் குருதியினால்
சில அரசியல்வாதிகள் பதவியிலிருக்கிறார்கள்

அறிவும் அறிவும் பேசட்டுமே
ஆயுதங்கள் பேச வேண்டுமா?

இதயங்களும் இதயங்களும் பேசட்டுமே
ஆயுதங்கள் பேச வேண்டுமா?

03.01.1992

# ஒன்றாக அழுவோம்

நாம் அழுவோம்
ஒரு நிமிடம் மட்டும்
நாம் ஒன்றாக அழுவோம்.

நட்புக்குரிய வல்லரசு சகோதரர்களே!
நீங்கள் என்னிடம் கேட்கின்றீர்கள்
உண்பதற்கு இறைச்சியுண்டு
உடுப்பதற்கு ஆடையுண்டு
குடிப்பதற்கு வைன் உண்டு
கேட்பதற்கு பாட்டுண்டு
ஆடுவதற்கு டிஸ்கோதெக்குண்டு
நாமேன் அழவேண்டுமென
என்னிடத்தில் டேட்கின்றீர்கள்.

நட்புக்குரிய வல்லரசு சகோதரர்களே!
ஆடலையும் பாடலையும்
ஆடம்பரங்களையும்
கொஞ்சநேரம் மறப்போம்
உலகத்தின் கொடிய யுத்தத்தையும் இரத்தத்தையும்
உலகத்தின் கொடிய வறுமையையும்
கொஞ்சநேரம் நினைப்போம்.

நட்புக்குரிய
வல்லரசு சகோதரர்களே!
இலங்கை மக்களின் இரத்தவெள்ளத்தை
பாரீஸ் தொலைக்காட்சியில் பார்க்கின்றேன்.
ஆபிரிக்க பச்சிளங் குழந்தைகளின்
பட்டினிக் கொடுமையையும்
பாரீஸ் தொலைக்காட்சியில் பார்க்கின்றேன்.

நட்புக்குரிய வல்லரசு சகோதரர்களே!
இந்த மானிடர்களின்
கொடிய காட்சிகள்
உங்கள் மனச்சாட்சியை
தட்டி எழுப்பவில்லையா?

ஒரு நிமிடம் நினைப்போம்
ஒரு நிமிடம் அழுவோம்
இந்த இயந்திர வாழ்க்கையில்
உங்கள் வாழ்க்கையை நினைத்திருக்கலாம்
உலக வாழ்க்கையை மறந்திருக்கலாம்.

நட்புக்குரிய வல்லரசு சகோதரர்களே!
இப்பொழுது உங்கள் கண்களைத் தொடுங்கள்
நீங்களும் அழுகின்றீர்கள்
ஏனென்றால்
நீங்களும் மனிதர்கள்

நாம் அழுவோம்
நாம் ஒன்றாக அழுவோம்
கொடிய யுத்தங்கள் வேண்டாம்
கொடிய வறுமை வேண்டாம்

நாம் ஒன்றாக எழுவோம்
உலக சமாதானத்திற்காக
நாம் ஒன்றாக எழுவோம்.

"சுட்டுவிரல்" பத்திரிகையில் வெளியான கவிதை

## நான் கவிஞனல்ல

நான் கவிஞனல்ல
இந்த உலகத்தின்
இரத்தமும் யுத்தமும்
என் இதயத்தை எரிக்கிறது
நான் சமாதான மனிதன்.

அமெரிக்க அரசியல்வாதிகளே!
நான் உங்களிடம் டாலர்கள் கேட்கவில்லை.
இந்த உலகத்தின் பசுமைக்காக
சமாதானம் கேட்கின்றேன்
என்னை உங்களுக்குத் தெரியாது
நான் இலங்கையின் அரசியல் அகதி
எந்த மனிதனுக்கும் அகதி முத்திரை வேண்டாம்
எங்கள் தாய்நாட்டிற்கு சமாதானம் வேண்டும்.

அமெரிக்க அரசியல்வாதிகளே!
நீங்கள் என்னை நோக்கி சொல்லுகிறீர்கள்
ஆயுத சமப்படுத்தலில்தான்
சமாதானம் மலருமென்று
மனித குருதி வெள்ளத்தில்
சமாதானம் மலருமா?

பிரான்சின் அரசியல்வாதிகளே
நான் உங்களிடம் குடிப்பதற்கு வைன் கேட்கவில்லை
அடிப்பதற்கு சென்ட் கேட்கவில்லை
சமாதானம் கேகட்கின்றேன்
நீங்கள் என்னை நோக்கி சொல்லுகிறீர்கள்
ஆயுத உற்பத்தியில்தான்
எங்கள் பொருளாதாரம் தங்கியிருக்கிறது என்கிறீர்கள்
உலகத்தின் குருதி வெள்ளத்திலா
உங்கள் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப போகிறீர்கள்?

ஆங்கில தேசமே
என் சமாதான மொழி
உனக்கு புரிகிறதா?
ஆங்கிலத்தில் எழுத முடியவில்லை - அதனால்
என் தாய்மொழியிலேயே எழுதுகிறேன்.

உடைந்து போய்விட்ட சோவியத் ஒன்றியமே!
நீ ஒன்றாயிருந்த போது - உன்னிடம்
எனக்கிருந்த மரியாதை
இப்பொழுது வரவில்லையே
ஐரோப்பா ஒன்றாகும்போது
நீங்கள் உடைந்து போய்விட்டீர்களே!

இந்திய அரசியல்வாதிகளே!
இந்திய ஏழைகளுக்கு
அணு ஆயுதம் வேண்டாம்
அரிசிதான் வேண்டும்.

இலங்கை அரசாங்கமே! - உன்னிடம்
சமாதானம் கேட்கப்போவதில்லை
நீங்கள் சமாதானத்தை
சாகடித்துக் கொண்டிருப்பவர்கள்.

உலக அரசியல்வாதிகளே!
கொடிய யுத்தமும் குருதி வெள்ளமும் வேண்டாம்
சமாதானம் வேண்டும்
இது அரசியல் அகதியின் வேண்டுகோள்.

## மனப்புரட்சி

மகனே நீ
மனம் மலர்ந்து சிரித்த போது
என் மனதில் தென்றல் வீசியது
பிரெஞ்சுத் தொலைக்காட்சி தினமும்
ஏன் இரத்தத்தை சிந்துகிறது
நீ வினவிய போது
என் மனதில் புயலடித்தது.

தினமும் உலகில்
சிந்தப்படும் குருதி
கறுப்புச் சகோதரர்களின்
குருதியாக இருக்கலாம்
மஞ்சள் சகோதரர்களின்
குருதியாக இருக்கலாம் - ஆனால்
சிந்தப்படும் குருதி
மானிடர்களின் சிவந்த குருதி.

தமிழ் நண்பனிடத்தில்
மானிடம் பற்றி பேசப்போனேன்
வட்டிப்பணம் வாங்கப் போவதாக
கூறிச்சென்றான் - வரும்வழியில்
வட்டிப்பணம்
வன்முறையில் பறிபோகாதா?

பிரெஞ்சு நண்பன் அழைத்து
அவன் வீட்டிற்கு சென்றேன்
அவன் வீட்டுச்சுவரை
அழகுபடுத்திக் கொண்டிருந்தான்
அவன் நண்பி ரோசாச் செடிக்கு
தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள்
நான் அவர்களிடம் மானிடம்
பற்றி பேசினேன்
அவன் ஏவுகணைகள் பற்றி
பேசினான்
உங்கள் அரசாங்கத்தின் ஏவுகணைகள்
வேற்று நாட்டு மனிதர்களைக் கொல்லும்
உங்களைப் பாதுகாக்குமா?
வேற்று நாட்டு விமானத்தின் குண்டால்
உங்கள் வீட்டு அழகான சுவரும்
உன் நண்பியின் ரோசாச்செடியும்
கருகிச் சாம்பலாகி விடாதா?

நீ எனக்கு மகனென்றாலும்
இந்த உலகத்திற்கு மானிடன்
உனது கேள்விக்கும்
என் பேச்சை கேட்கும்
உன் செவிகளுக்கும் என் நன்றி
நான் பேசும் தமிழ் வார்த்தைகள்
ஒன்றிரண்டுதான்
உனக்குப் புரியுமென்பது
எனக்குத் தெரியும்.

மானிடம் பற்றிய
ஒருசில வார்த்தைகளாவது
உன் அடி மனதில் பதியட்டும்
அந்த நல்ல விதைகள்
உன் எதிர்காலத்தில்
மானிடத்தின்
துளிர்களாக வெளிவரட்டும்.

மகனே நானும் நீயும்
தமிழீழத்தில் இருந்திருந்தால்
நீ இறந்திருக்கலாம் அல்லது
நான் இறந்திருக்கலாம் அல்லது
உன் அம்மா இறந்திருக்கலாம்
நீ உன் அம்மாவைக் கேட்டு
தினமும் அழுதிருக்கலாம்.

பிரான்சிலும் மானிடத்தைச்
சிதைக்கும் வன்முறைகள்
அதிகரித்துக் கொண்டிருக்கிறதே
உலகில் நடக்கும் கொடிய யுத்தம்
எங்கள் வீட்டு வாசற்படிக்கு வராதா?

நீ அன்று
பள்ளி விட்டுத் திரும்பியபோது
கறுப்பு பையன் அடித்துவிட்டானென
அழுது கொண்டு வந்தாயே?
நானும் உணர்ர்ச்சி வசப்பட்டுப் போனேன்
கட்டுப்படுத்தி, நின்று நிதானித்து
அறிவு பூர்வமாகி இதயபூர்வமாகி
சிந்தித்த போது

இரண்டு நாய்க்குட்டிகள்
ஒன்றேடொன்று
சீண்டி விளையாடுவதில்லையா?

குறும்புத்தனம் குழந்தைகளின்
இயல்பில்லையா?
வெள்ளைப் பையன் அடித்தால்
விளையாட்டு
கறுப்புப் பையன் அடித்தால்
விபரீதமா?
இந்த கறுப்பு புத்தி
என் மூளைக்குள் எப்படி வந்தது?

அந்தச்சாதி இந்தச்சாதி
அந்தத்தீவு இந்தத்தீவு
தமிழன் சிங்களவன்
இந்து பௌத்தன்
இப்பொழுது கறுப்பு வெள்ளை

நாங்கள் எப்பொழுது
வெள்ளையர்களானோம்
வெள்ளையர்கள் எங்களை
எப்போது?
வெள்ளையர்களாக ஏற்றுக்கொண்டார்கள்
"சொக்கலேற்" நிறமென
ஆசைக்குச் சொல்லிக்கொள்ளலாம்.

சிவப்பு நிறம் சிவப்பாக
இருந்தால்தானே அதற்கு அழகு
பச்சை பச்சையாக
இருந்தால்தானே அதற்கு அழகு
எங்களுக்கேன் இந்த வெள்ளை வேடம்?
கறுப்பு ஆபிரிக்கர்கள்
பொருளாதாரத்தில்
தொழில்நுட்பத்தில், நாகரீகத்தில்
உச்ச நிலையிலிருந்திருந்தால்
நாங்களும் கறுப்பர்களென்ன
பெருமையாக சொல்லிக் கொண்டிருப்போம்
நாங்கள் தமிழ்ப் பெண்களிலும்
வெள்ளைப் பெண்களையல்லவா தேடுகிறோம்
ஏன்? கறுப்பர்களை வெறுக்கிறோம்
திருடுவதாலா?
கறுப்பு ஆபிரிக்கர்களின்
சனத்தொகையில்
திருடர்கள் எத்தனை வீதம்?

அன்று வேலைக்குச் செல்லும் பொழுது
பாரீசின் சன நெருக்கடியில்
ஒரு கண்பார்வையற்ற

வெள்ளை மனிதர்
நடந்து செல்ல முடியாமல்
தடுமாறிக் கொண்டிருந்தாரே
கை கொடுத்து உதவியது
ஒரு கறுப்புப் பெண்ணல்லவா?

வேலை அவசரத்தில்
என் மனிதம் எங்கே போனது?
கறுப்புப் பெண்ணிடத்தில் - அந்த
மனிதம் எப்படி வந்தது?
இந்த மானிட புத்தி
எத்தனையாம் நூற்றாண்டில்
எங்களுக்கு வரப்போகிறது
இது உங்களை நான் கேட்கும்
கேள்வி மட்டுமல்ல
என்னை நானே கேட்கும் கேள்வி.

"துளிர்" இதழில் வெளியான கவிதை

# தேச விடுதலையின் பின்பு

தேசத்தை நாசகாரர்களிடமிருந்து மீட்டபின்பு
தேச விடுதலையென்ற கோசமகன்று
பொருளாதார விடுதலையெனும் கோசம்
பொதுமக்களிடையே பொங்கியெழல் வேண்டும்.

இரத்தத்தை இரப்பர் மரத்திற்கு ஊற்றி
தத்தம் தேவைகளை மனதினில் தேக்கி
கோடைக்காலத்து கானல் பயிர்களாக - வாழும்
மலையக மக்களின் அடிமை விலங்கு உடைக்கப்படல் வேண்டும்.

நாற்றமெடுக்கும் சமுதாய அமைப்புதனை
மாற்றி அமைத்திடல் வேண்டும்
சேற்றிலிறங்கி உழைக்கும் வர்க்கம்
ஏற்றம் கண்டிடல் வேண்டும்.

காடுகள் பல திருத்தி
களனிகளாக்கிடல் வேண்டும்
குளங்கள் பல அமைத்து - விவசாயத்
தளங்கள் அமைத்திடல் வேண்டும்.

மாட்டு வண்டியோடிய வீதிகளில்
மோட்டார் வண்டிகள் ஓடிடல் வேண்டும்
மண் குடிசைகளெல்லாம்
மாடி வீடுகளாக மாற்றிடல் வேண்டும்.

சிறைச்சாலைகள் பல மூடி
தொழிற்சாலைகள் அமைத்திடல் வேண்டும்
கரை வலை வீசி மீன் பிடித்த மீனவர்கள்
கப்பலில் சென்று மீன் பிடித்திடல் வேண்டும்.

மரண ஓலங்கள் ஒலித்த மக்களிடையே
மழலைகள் பல தவழ்ந்து விளையாடிடல் வேண்டும்
அழுகைக்குரல்கள் ஒலித்த மக்களிடையே
சிரிப்பொலிகள் ஓங்கி ஒலித்திடல் வேண்டும்.

## சமாதானக்காற்று

நீல வானம் அழகுதான்
வானமதில் பறக்கும்
வெள்ளைப் பறவையும் கொள்ளை அழகுதான்
மானிடனும் அழகன்தான்.

ஆனால்..... ?
கோரமான எறிகணையொன்று
பறந்து வருகிறதே................
இன்னும் சில நிமிடங்களில்
மானிடர்களை இரத்த வெள்ளத்தில் சிதைத்து
மரண ஓலத்தை எழுப்பப் போகிறதே.........

எந்த மானிடனைக் கொல்ல?
எந்த இரத்த வியாபாரிகள்
இதை உற்பத்தி செய்தது?

ஒரு மனிதனின் வாழ்விற்காக
மறு மனிதன் மரணிப்பதா?
ஒரு தேசத்தின் வாழ்விற்காக
மறு தேசம் மரணிப்பதா?

மானிடர்களே!
இதயமானவர்களே!
ஏன் இதயங்களில் எல்லைகளைப் போட்டு
முட்கம்பி வேலிகளைப் அடித்துக் கொள்ளுகிறீர்கள்?

இதயமானவர்களே!
எல்லைகளைக் கடவுங்கள்
அரசியல் சித்தாந்தங்களின்
மதவாதிகளின்
கட்சிகளின்
எல்லைகளைக் கடவுங்கள்.

இதயமானவர்களே!
மானிடம் என்ற
பசுமையான பரந்த புல்வெளி
உங்களை அழைக்கிறது - அங்கு
சமாதானக்காற்று வீசிக்கொண்டிருக்கிறது.

இதயமானவர்களே!
மூடிய இதயத்தின் கதவுகளை
திறந்து கொண்டு வாருங்கள் - அங்கு
ஒற்றுமை மலர்கள் மலரும்
மானிடத்தின் தென்றல்
உங்களை கட்டி அணைக்கும்
உலகத்தின் ஒற்றுமைக்கு வழிபிறக்கும்.

இதயமானவர்களே!
நான் உங்களை மட்டும் நேசிக்கிறேன்.
ஏனெனில்
நீங்களும் என்னைப் போன்றவர்கள்.

10.01.2001



# கவிதை சிந்தும் கண்ணீர்

இது கவிதையல்ல
கண்ணீர் வரிகள்
கவி மனக் கிணற்றுள்
கடல் நீர் உட்புகுந்து விட்டது - இனி
கவிப்பயிர் முளைக்காது.

கவி மனக் கிணற்றுள்
ஆழிப் பேரலையால் மனித உயிர்கள்
அடித்து வீழ்த்தப்பட்டிருக்கிறது.
இது கவிதை எழுதும் நேரமல்ல
கை கொடுக்கும் நேரம்.

கவிதை எழுத
எதுகை மோனை தேடினேன்
உவமானங்கள் தேடினேன்
நான் தொலைக்காட்சியில் கண்டதெல்லாம்
பிஞ்சுக்குழந்தைகளின் இறந்த உடல்கள்தான்.

கடலே! கடலே!
உன்னைக் கடவுளோடு
உவமிக்க முடியுமா?
இயேசுநாதர் சிலையும்
அடித்து வீழ்த்திய ஆழிப்பேரலையல்லவா நீ
ஆலயத்தேரையும்
அடித்து வீழ்த்திய ஆழிப்பேரலையல்லவா நீ
குர் ஆன் படித்த பள்ளிச்சிறுவர்களையும்
அள்ளிச் சென்ற பேரலையல்லவா நீ
மத நம்பிக்கைகளையும்
மனித நம்பிக்கைகளையும் கூட
அடித்துச்சென்ற பேரலையல்லவா நீ.

கடலே! கடலே! நீ
மதம் பிரித்து பார்த்தாயா?
இனம் பிரித்து பார்த்தாயா?
சாதி பிரித்து பார்த்தாயா?
ஏழை பணக்காரனென பார்த்தாயா?
வெள்ளை கறுப்பனென பார்த்தாயா?
பாலகன் பாட்டனென பார்த்தாயா?
உன் அகன்ற வாய்க்கு அத்தனையும் சமம்.

இனிய சகோதரர்களே!
இனியாவது மனம் திருந்துவோம்
கடலிடமிருந்து கற்றுக்கொள்ளுவோம்.
இயற்கை எம்மை எச்சரித்துவிட்டு சென்றிருக்கிறது.

"அம்மா இல்லாமல் எங்களால்" வாழ முடியவில்லையே
இது தமிழ் நாட்டு சிறுமியின் அழுகுரல்
மனைவி இல்லாமல் வாழ முடியவில்லையே
இது தமிழீழ கணவனொருவனின் அழுகுரல்
மகிழ்ச்சியாக நாளைக் கழிக்க வந்து
மரணித்து விட்டார்களே வெள்ளைச் சகோதரர்கள்.

இனிய சகோதரர்களே!
நாம் இனியும் எச்சரிக்கையின்றி வாழ்தல் கூடாது.
பூமி அதிர்வு ஆய்வுமையம் அமைப்போம்
வானிலை ஆய்வுமையம் அமைப்போம்
வளிமண்டல ஆய்வுமையம் அமைப்போம்
இயற்கையோடு போராடித்தான் வாழ்ந்தோம்
இனியும் போராடுவோம்
வாருங்கள் சகோதரர்களே! வாருங்கள்.

Garges-Sarcelle இல் நடந்த சுனாமி அஞ்சலி நிகழ்வில் வாசிக்கப்பட்ட கவிதை





# பாடல்கள்







## மாவீரரே...

மா வீரரே - எங்கள்
மா வீரரே

மண்ணில் மறைந்து
மனதில் நிறைந்த
மா வீரரே
( எங்கள் மாவீரரே )

கண்ணை நனைத்து
காவியமான
மாவீரரே
( எங்கள் மாவீரரே )

உயிரைக் கொடுத்து
உயிரை கொடுத்த
மாவீரரே
( எங்கள் மாவீரரே )

வாழ்வைக் கொடுத்து
வாழ வைத்த மாவீரரே
மாவீரரே
( எங்கள் மாவீரரே )

தேசம் துறந்து
தேசமான
மாவீரரே
( எங்கள் மாவீரரே )

பாசம் துறந்து
பண்பை வளர்த்த
மாவீரரே
( எங்கள் மாவீரரே )

பொன்னை மறந்து
மண்ணை மீட்ட
மாவீரரே
( எங்கள் மாவீரரே )

வெளிநாடு மறந்து
நாடு காத்த
மாவீரரே

( எங்கள் மாவீரரே )

உங்கள் காலில் வீழ்ந்து
வணங்கலாம்
மாவீரரே

( எங்கள் மாவீரரே )

நான் காற்றில் அனுப்பும்
கண்ணீர் வரிகள்
காதில் கேட்குமா - உங்கள்
காதில் கேட்குமா

மாவீரரே
எங்கள் மாவீரரே

"ஈழமுரசு" பத்திரிகையில் வெளியான பாடல்
16.11.1999

# பறவைகள் பறந்து போயின...

பறவைகள் பறந்து போயின - நம்
பக்கம் யாருமில்லை - எம்
படைகள் எழுந்து மோதின - இனி
துக்கம் ஏதுமில்லை

எங்கள் தலைவன் இருந்தான் பக்கத்திலே - அவன்
என்றும் கலந்தான் துக்கத்திலே
அவனே அண்ணன் பிரபா
அவனே எங்கள் தலைவன்
( பறவைகள் பறந்து போயின.................)

எதிரி விமானம் வீழ்ந்தது எரி நெருப்பில்
எதிரி கப்பல் தாண்டது கடலடியில்
அவனே எங்கள் வழிகாட்டி
அவனே விடுதலைப் படகோட்டி
( பறவைகள் பறந்து போயின.................)

நாம் வென்றால்தானே வாழ்வு
இன்றேல் என்றும் எங்களுக்கு தாழ்வு
நாமிணைவோம் தமிழ் உறவோடு
நாமெழுவோம் தமிழ் உறவோடு
( பறவைகள் பறந்து போயின.................)

11.07.1998

# நாங்கள் புலம்பெயர் தமிழர்...

நாங்கள் புலம் பெயர் தமிழர்
நாடு மாறினாலும்
நாங்கள் தமிழர்
( நாங்கள் தமிழர்................ )

பாரீசில் வாழ்ந்தாலும் - எங்கள் தமிழ்
பண்பாட்டை மறப்போமா
இலண்டனில் வாழ்ந்தாலும் - எங்கள்
இலட்சியத்ததை இழப்போமா
( நாங்கள் தமிழர்................ )

மாடிகளில் வாழ்ந்தாலும் - எங்கள்
மாவீரரை நாம் மறப்போமா?
ஜெர்மனியில் வாழ்ந்தாலும் - எங்கள்
ஜென்ம பூமியை இழப்போமா?
( நாங்கள் தமிழர்................ )

அப்பிள்பழம் உண்டாலும் - எங்கள்
அண்ணன் தம்பிகளை மறப்போமா
இத்தாலியில் வாழ்ந்தாலும் - எங்கள்
இளம் பிஞ்சுகளை மறப்போமா?
( நாங்கள் தமிழர்................ )

சுவீடனில் வாழ்ந்தாலும் - எங்கள்
சுதந்திரத்தை இழப்போமா
சுவிற்சலாந்தில் வாழ்ந்தாலும் - எங்கள்
தேசியத்தை மறுப்போமா?

அடிமையாக வாழ்ந்தாலும்
எங்கள் சுதந்திரத்தை
அகதி வாழ்வில் கரைப்போமா?

டென் மார்க்கில் வாழ்ந்தாலும் - எங்கள்
தாய் மண்ணை காலால் உதைப்போமா?
நோர்வேயில் வாழ்ந்தாலும் - எங்கள்
நொந்து போன மக்களை மறப்போமா?
( நாங்கள் தமிழர்................ )

## பார் பார் அங்கே யாழ்ப்பாணம்...

பார் பார் அங்கே யாழ்ப்பாணம்
எதிரிப் படைகளின் கும்மாளம்
எத்தனை நாளிந்தக் கும்மாளம்

எம்படை ஒரு நாள் முன்னேறும்
எதிரிப் படைகள் பின் வாங்கும்
( பார் பார் அங்கே யாழ்ப்பாணம் )

எங்கள் பெண்கள் கற்பழிப்பு - இங்கு
எங்கள் நெஞ்சில் பெரும் நெருப்பு
( பார் பார் அங்கே யாழ்ப்பாணம் )

அரிசி மின்சாரம் பிச்சையடா - அது
சந்திரிக்காவின் திட்டமடா
( பார் பார் அங்கே யாழ்ப்பாணம் )

எங்கள் மக்களை காணவில்லை
அவர்கள் எங்கேயென்று நீ சொல்லு
( பார் பார் அங்கே யாழ்ப்பாணம் )

தமிழீழந்தான் ஒரு முடிவு - அது
தமிழருக்கு ஒரு விடிவு
( பார் பார் அங்கே யாழ்ப்பாணம் )

# வெற்றி வெற்றி என்றே பாடு...

வெற்றி வெற்றி என்றே பாடு - இது
எங்கள் வீரர்களின் காலம்
இன்னுமா? நெஞ்சில் பாரம்
இனியுமா? சந்தேகம்

தட்டு கை தட்டு - இது
புலம் பெயர் தமிழனின் பாடல்
இனி தமிழருக்கில்லை ஓய்வு
எங்கள் தேசமே எங்கள் வாழ்வு

( வெற்றி............... )

இது பிரபாகரனின் காலம்
இனி பொழுதெல்லாம் போர்க்கோலம்
இனித்தான் பொற்காலம்
இன்னுமா சந்தேகம்

( வெற்றி............... )

மாவீரர்களின் வெற்றி
மக்களுக்கெல்லாம் வெற்றி
தணியுமா எங்கள் தாகம்
தமிழீழமே எங்கள் கோசம்

( வெற்றி............... )

10.11.1999

# யாரும் யாரெனக் கேட்டால்...

யாரும் யாரெனக் கேட்டால்
தமிழனென நீ சொல்லு
தாய்மொழி யாதெனக் கேட்டால்
தமிழ்மொழிதான் சொல்லு

தாயகம் யாதெனக் கேட்டால்
தமிழீழந்தான் சொல்லு
தலைவன் யாரெனக் கேட்டால்
பிரபாகரன்தான் சொல்லு
( யாரும் யாரெனக் கேட்டால்.......... )

யாரும் உரிமையை மறுத்தால்
போர்க்குணம் கொண்டு நில்லு
யாரும் கடமையை மறந்தால்
கண்ணியமாய் வாழ்ந்து காட்டு
( யாரும் யாரெனக் கேட்டால்.......... )

யாரும் உண்மையை ஒழித்தால்
உண்மைக்கு வெளிச்சம் காட்டு
யாரும் அன்பை பழித்தால்
அன்பாய் வாழ்ந்து காட்டு
( யாரும் யாரெனக் கேட்டால்.......... )

யாரும் கல்வியை வெறுத்தால்
கனிவாய் புத்தி சொல்லு
யாரும் விரும்பி படித்தால்
முதுகில் நீ தட்டு
( யாரும் யாரெனக் கேட்டால்.......... )

யாரும் சண்டை பிடித்தால்
சமாதானம் ஆக்கு
யாரும் பேதம் பேசினால்
யாவரும் சமமென சொல்லு
( யாரும் யாரெனக் கேட்டால்.......... )

Goussainville தமிழ்ச்சோலை ஆண்டு விழாவில் பாடப்பட்ட பாடல்

# தனி நாடா இல்லை வெளிநாடா...

தனி நாடா- இல்லை
வெளி நாடா
இது தமிழனுக்கு
ஒரு கேடா?

அகதியானோம்
அடிமையானோம்
அந்நிய தேசங்களில்
முகமும் இழந்தோம்
( தனி நாடா இல்லை.............. )

உயிருக்காக உயிருக்காக
உலகமெல்லாம் நாம் அலைந்தோம்
வயிறு நிரப்ப வயிறு நிரப்ப
விமானங்களில் நாம் பறந்தோம்
( தனி நாடா இல்லை.............. )

பணமும் தேடி பணமும் தேடி
பகலிரவாய் நாம் அலைந்தோம்
அறிவையெல்லாம் அறிவையெல்லாம்
கோப்பை கழுவும் தண்ணீரில் கரைத்தோம்
( தனி நாடா இல்லை.............. )

காதலின்றி கல்யாணமின்றி
கானல் நீராய் நாமிருந்தோம்
பந்த பாசங்களை நாமிழந்து
படுக்கையில் கிடந்தழுதோம்
( தனி நாடா இல்லை.............. )

வாழ்க்கையின்றி வசந்தமின்றி
வாழாமல் நாமும் அழிந்தோம்
( தனி நாடா இல்லை.............. )

# இளைய பூவே...

இளைய பூவே
எழுந்து பேசு
இன்னும் தூக்கமா

நீ எதிரிப்படையின்
குண்டு வீழ்ந்து
மடிந்து சாவதா?

( இளைய பூவே...................... )

நான் மாவு வாங்கி
அரிசி வாங்கி
வந்ததேனடா?

( இளைய பூவே...................... )

நான் பத்து மாதம்
சுமந்து பெத்து
பாதியில் சாவதா?

( இளைய பூவே...................... )

வாழ்க்கையில்லை
வசந்தமில்லை
நீயில்லாமலே

( இளைய பூவே...................... )

சொந்தமில்லை
பந்தமில்லை
நீயில்லாமலே

( இளைய பூவே...................... )

நான் வாழ்ந்து - இங்கு
குண்டு வீழ்ந்து
மடிந்து சாவதா?

( இளைய பூவே...................... )

நான் எழுந்து நின்று
எதிரியை வென்று
வெற்றிவாகை சூடவா?

( இளைய பூவே...................... )

17.03.1998

# தமிழீழம் எங்கள் தாய்நாடு...

தமிழீழம் - எங்கள்
தாய்நாடு - அந்தத்
தனிநாடு - எங்கள்
தாய் வீடு

என்ன இல்லை - எங்கள்
தாய்நாட்டில்
நாமேன் அலைவான் - இங்கு
வெளிநாட்டில்
( தமிழீழம் எங்கள் தாய்நாடு...................)

கடல் வளமும் அங்கு உண்டல்லோ?
பனை வளமும் அங்கு உண்டல்லோ?
நில வளமும் அங்கு உண்டல்லோ?
நீர் வளமும் அங்கு உண்டல்லோ?
( தமிழீழம் எங்கள் தாய்நாடு...................)

எங்கள் அம்மாக்களேன் அழ வேண்டும்
நானும் கண்ணீரையேன் விடவேண்டும்

எம் தேசம் இன்றே எழ வேண்டும் - அது
எல்லாரும் நாளை பெற வேண்டும்
( தமிழீழம் எங்கள் தாய்நாடு...................)

எம் தேசம் எழும் துணிவோடு - அது
நாளை மலரும் தன் நிறைவோடு
( தமிழீழம் எங்கள் தாய்நாடு...................)

16.03.1998

# சமாதானம் என்ன ஆச்சு...

சமாதானம் என்ன ஆச்சு - அது
வெறும் பேச்சு - அது
தேர்தலோடு எல்லாம் போச்சு
தமிழீழமே எங்கள் மூச்சு

உரிமை மறுப்பு வேத வாக்கா - தமிழன்
உதிரமென்ன சேற்று நீரா?
( சமாதானம் என்ன ஆச்சு.................. )

நம்பியிருந்தது போதும்
யாரும் துணை நமக்கு வரவில்லை
( உரிமை மறுப்பு வேதவாக்கா.................. )

எதிரியை நீ தாக்கு
அங்கு இல்லை என்றே நீ ஆக்கு
( உரிமை மறுப்பு வேதவாக்கா.................. )

உரிமை போரென சொல்லு - இந்த
வெற்றிச் செய்தியை
உலகிற்கு நீ சொல்லு
( சமாதானம் என்ன ஆச்சு.................. )

20.03.1998

## ஏழை மனிதா நீ

ஏழை மனிதா- நீ
எழுந்து நில்லடா - உன்
விடுதலைப் பாதையில் - நீ
விரைந்து செல்லடா

இயற்கை வளங்களும் இயந்திரங்களும்
உனக்குந்தானடா மனிதா ( உனக்கும் தானடா )
கல்விக் கூடங்களும் கலைக்கூடங்களும்
உனக்கும் தானடா மனிதா ( உனக்கும் தானடா )

மாடமாளிகைகளும் மலர்த்தோட்டங்களும்
உனக்கும் தானடா மனிதா ( உனக்கும் தானடா )
ஆடை அணிகளும் ஆபரணங்களும்
உனக்கும் தானடா மனிதா ( உனக்கும் தானடா )

இசையும் இன்பமும் ஆடல் கலைகளும்
உனக்கும் தானடா மனிதா ( உனக்கும் தானடா )
பறக்கும் விமானமும் பயணக் கப்பலும்
உனக்கும் தானடா மனிதா ( உனக்கும் தானடா )

நோயும் நொடியும் பாழும் வயிறும்
உனக்குச் சொந்தமா மனிதா ( உனக்குச் சொந்தமா )
கொட்டும் மழையும் கொதிக்கும் வெயிலும்
உனக்குச் சொந்தமா மனிதா ( உனக்குச் சொந்தமா )

வயல் வெளிகளிலும் தொழிற்கூடங்களிலும் நீ
மாய்ந்து கிடப்பதேன் மனிதா ( நீ மாய்ந்து கிடப்பதேன் )
ஓலைக்குடிசையில் நீ தினமும்
ஏங்கிக் கிடப்பததா மனிதா ( நீ ஏங்கிக் கிடப்பதா )

"தென்றல்" இதழில் வெளியான பாடல்

## புலிகள் புலிகள்...

புலிகள் புலிகள்
விடுதலைப் புலிகள்
நாங்கள் சுதந்திரப்புலிகள்

களத்தில் எதிரி வந்த போது
கரும்புலியானோம்
( நாங்கள் கரும்பு.......... )

கடலில் எதிரி வந்த போது
கடல் புலியானோம்
( நாங்கள் கடல்பு.......... )

வானில் எதிரி வந்த போது
வான் புலியானோம்
( நாங்கள் வான்.......... )

தமிழ்ப் பெண்ணினமே
பெருமை கொள்ளும்
பெண் புலியானோம்
( நாங்கள் பெண்.......... )

எதிரி எல்லைவரை
ஓடும் வரை
விரட்டியடிப்போம்
( நாங்கள் விரட்.......... )

எழில்மிகு எங்கள் தேசம்
காத்து நிற்போம்
( நாங்கள் காத்து.......... )

எங்கள் மக்கள் துயர் துடைக்க
நாங்கள் கை கொடுப்போம்
( நாங்கள் கைகொடு.......... )

## தாய்நிலம் என்பது தாயின்மடி...

தாய் நிலம் என்பது தாயின் மடி
தாயகம் என்பது எங்களின் உரிமை
தமிழில் பண் பாடுவோம்

தாய் நிலம் என்பது தாயின் மடி
தாயகம் என்பது எங்களின் உரிமை
தமிழ்மொழி என்பது உயிரின் இருப்பு
தாயகம் காப்பது எங்களின் கடமை
( தாய் நிலம் என்பது.......... )

விடுதலை என்பது வீரத்தின் விளைச்சல்
இலட்சியம் என்பது வாழ்வின் தேவை
வளம் என்பது உழைப்பில் இருக்கு
வாழ்க்கை என்பது இதயத்தில் இருக்கு
( தாய் நிலம் என்பது.......... )

சொந்த வீட்டை இழந்து நாட்டில் அலைந்தோம்
குருதி சிந்தி மண்ணை நனைத்தோம்
உறவைத் தொலைத்து தொலைக்கு வந்தோம்
அகதி வாழ்வு இன்னும் எதற்கு?
( தாய் நிலம் என்பது.......... )

அறிவு இருக்கு ஆற்றல் இருக்கு
தன்னிகரில்லா தலைமை இருக்கு
தாயகம் முழுக்க வளங்கள் இருக்கு
இன்னும் ஏன் கவலை எதற்கு?
( தாய் நிலம் என்பது.......... )

Garges-Sarcelle இல் நடந்த பொங்கல் விழாவில் பாடப்பட்ட பாடல்

## மானிடனே எழுக...

மானிடனே எழுக
மனிதன் மட்டும் வாழுகிறான்
மனிதமிங்கே இறந்ததுமேன்
மானிடனே எழுக

மனிதன் சிந்தும் குருதியினால்
இதயமெல்லாம் வலிக்கிறதே
மனிதன் போடும் குண்டுகளால்
மரங்களும் பூக்களை உதிர்க்கிறதே
( மானிடனே எழுக.......... )

குழந்தையும் குருதியை வடிப்பதனால்
குயில்களும் பாட மறுக்கிறதே
ஆலயமணியின் ஓசையெல்லாம்
அர்த்தமின்றி ஒலிக்கின்றதே
( மானிடனே எழுக.......... )

மதங்களும் மதங்களும் மோதியதால்
மனிதமிங்கே இறந்ததுவே
இனங்களும் இனங்களும் மோதியதால்
மனிதமிங்கே இறந்ததுவே
( மானிடனே எழுக.......... )

விஞ்ஞானமிங்கே விண்வெளியில்
மனிதமிங்கே படுகுழியில்
பாவி மனிதன் பட்டினியில்
பதவி கொண்டோர் விடுமுறையில்
( மானிடனே எழுக.......... )

அரசியல் கணக்கு எழுதிடவே
மனித இரத்தம் தேவையா ?
இயற்கையும் கூட அழிகிறதே
இறைவன் ஏனோ தடுக்கவில்லை
( மானிடனே எழுக.......... )

## தாய்நிலம் என்பது தாயின்மடி....

தாய் நிலம் என்பது தாயின் மடி
தாயகம் என்பது எங்களின் உரிமை
தமிழில் பண் பாடுவோம்

தாய் நிலம் என்பது தாயின் மடி
தாயகம் என்பது எங்களின் உரிமை
தமிழ்மொழி என்பது உயிரின் இருப்பு
தாயகம் காப்பது எங்களின் கடமை
( தாய் நிலம் என்பது.......... )

விடுதலை என்பது வீரத்தின் விளைச்சல்
இலட்சியம் என்பது வாழ்வின் தேவை
வளம் என்பது உழைப்பில் இருக்கு
வாழ்க்கை என்பது இதயத்தில் இருக்கு
( தாய் நிலம் என்பது.......... )

சொந்த வீட்டை இழந்து நாட்டில் அலைந்தோம்
குருதி சிந்தி மண்ணை நனைத்தோம்
உறவைத் தொலைத்து தொலைக்கு வந்தோம்
அகதி வாழ்வு இன்னும் எதற்கு?
( தாய் நிலம் என்பது.......... )

அறிவு இருக்கு ஆற்றல் இருக்கு
தன்னிகரில்லா தலைமை இருக்கு
தாயகம் முழுக்க வளங்கள் இருக்கு
இன்னும் ஏன் கவலை எதற்கு?
( தாய் நிலம் என்பது.......... )

Garges-Sarcelle இல் நடந்த பொங்கல் விழாவில் பாடப்பட்ட பாடல்

## மானிடனே எழுக...

மானிடனே எழுக
மனிதன் மட்டும் வாழுகிறான்
மனிதமிங்கே இறந்ததுமேன்
மானிடனே எழுக

மனிதன் சிந்தும் குருதியினால்
இதயமெல்லாம் வலிக்கிறதே
மனிதன் போடும் குண்டுகளால்
மரங்களும் பூக்களை உதிர்க்கிறதே
( மானிடனே எழுக.......... )

குழந்தையும் குருதியை வடிப்பதனால்
குயில்களும் பாட மறுக்கிறதே
ஆலயமணியின் ஓசையெல்லாம்
அர்த்தமின்றி ஒலிக்கின்றதே
( மானிடனே எழுக.......... )

மதங்களும் மதங்களும் மோதியதால்
மனிதமிங்கே இறந்ததுவே
இனங்களும் இனங்களும் மோதியதால்
மனிதமிங்கே இறந்ததுவே
( மானிடனே எழுக.......... )

விஞ்ஞானமிங்கே விண்வெளியில்
மனிதமிங்கே படுகுழியில்
பாவி மனிதன் பட்டினியில்
பதவி கொண்டோர் விடுமுறையில்
( மானிடனே எழுக.......... )

அரசியல் கணக்கு எழுதிடவே
மனித இரத்தம் தேவையா ?
இயற்கையும் கூட அழிகிறதே
இறைவன் ஏனோ தடுக்கவில்லை
( மானிடனே எழுக.......... )



ஆசிரியர் வி. பாஸ்கரன்
சாவகச்சேரியின் கிராமங்களில் ஒன்றான
மீசாலையில் 04.09.1964 இல் பிறந்தவர்.

உயர்கல்விவரை மீசாலை விக்கினேஸ்வரா
மகாவித்தியாலயத்தில் பயின்றவர்.
1985 இல் பிரான்சிற்கு புலம்பெயர்ந்தார்.
உயர்கல்வி கற்கும்பொழுதே கவிதைகள்
எழுத ஆரம்பித்தவர். படிப்படியாக பாடல்கள்,
சிறுகதைகள், கட்டுரைகளை
'மீசாலையூர் சுதந்திரன்' எனும் புனைபெயரில்
எழுதி வந்தார். தற்பொழுது சிறுவர் நாடகங்களென
தனது கலைப்பரப்பை அகலப்படுத்தி வருகிறார்.

இவரது ஆக்கங்கள் சிரித்திரு, பாரீஸ் ஈழநாடு, தென்றல்,
ஈழமுரசு, சுட்டுவிரல் ஆகிய பத்திரிகைகள், சஞ்சிகைகளில்
வெளிவந்திருக்கின்றன.
இவரது கவிதைகள் I.B.C, [redacted]
தமிழ் ஒலி வானொலிகளிலும்
T.T.N தொலைக்காட்சியிலும் ஒலி, ஒளிபரப்பாகியிருக்கின்றன.
வான்மதி, மாணவன் ஆசிரியர் குழுவிலும்
கடமையாற்றியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்ச்சோலையில் இணைந்து தமிழ்க்குழந்தைகளின்
தாய்மொழிக் கல்வியிலும் கலைத்துறை மேம்பாடுகளிலும்
தனது கவனத்தைச் செலுத்தி வருகிறார்.

*திரு. மத்தியாஸ் டக்ளஸ்,*
*தலைவர்,*
*கார்ச் சார்சல் தமிழ்ச்சங்கம்.*